Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 21 சனிக்கிழமை (05-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:41

★ புலிகள் மீதான தடை நீக்கம்
★ பொருளாதாரத் தடையை முற்றாக விலக்கல்
★ மீன்பிடி, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்

# நோர்வேக் குழுவினரிடம் பாலசிங்கம் 3 முக்கிய விடயங்களை வற்புறுத்தல்

## நேற்று லண்டன் பேச்சுகளின்போது

லண்டன்,ஜனவரி5

**இலங்கையில் அமைதித் தீர்வு ஏற்படுவதற்கு அனுசரணை வழங்கும் நோர்வேயின் தூதுக் குழு நேற்று நண்பகல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை அவரது லண்டன் இல்லத்தில் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சு நடத்தியது.**

**இந்தப் பேச்சுக்களின் போது புலிகள் மீதான தடை நீக்கம், வன்னி மீதான பொருளாதாரத் தடையை விலக்குதல், மீன்பிடி - போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை அகற்றுதல் ஆகிய மூன்று விடயங்களை தான் வலியுறுத்தியதாக அன்ரன் பாலசிங்கம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.**

நோர்வேயின் அனுசரணைக் குழுவில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிஸன், வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி செல்வி கேர்ஸ்டி ரொம்ஸ்டால் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கத்தோடு அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் பங்குபற்றினார்.

அன்ரன் பாலசிங்கம் பின்வரும் விடயங்களைத் தாம் நோர்வேக் குழுவிடம் வற்புறுத்தியதாகத் தெரிவித்தார்:-

சமாதானப் பேச்சு நடத்துவதற்கு ஒரு நல்லெண்ணப் புறச்சூழ்நிலை

(02ஆம் பக்கம் பார்க்க)

அரசு - புலிகள் பேச்சுக்களால்

## மீள யுத்தம் வெடித்து இரத்த ஆறு ஓடும்!

### ஜே.வி.பி. பிரமுகர் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.5

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தவிருக்கும் பேச்சுக்கள் மீண்டும் பெரும் யுத்தம் வெடித்து இரத்த ஆறு ஓட வழிவகுக்கும் -

இப்படிக் கூறுகின்றார் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

கொழும்பில் நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காக அவர் இந்தச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வேயின் உதவியுடன் அரசு

(02ஆம் பக்கம் பார்க்க)

மதனராஜன், நெப்போலியன் தீவகத்தில் உலாவா?

## 'உதயன்' செய்தியின் அடிப்படையில் விசாரணை நடத்துவதற்கு உத்தரவு

### பொலீஸாருக்கு நீதிவான் விடுத்தார்

யாழ்ப்பாணம்,ஜன.5

நாரந்தனையில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் ந. மதனராஜன், நெப்போலியன் ஆகியோர் தீவுப் பகுதியில் தங்குதடையின்றி உலா வருவதாக நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் குறித்து விசாரித்து, உண்மை நிலை பற்றி நீதிமன்றத்துக்கு உடனடியாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும்படியும் -

இவர்கள் இருவரும் தீவுப்பகுதியில் நடமாடுவது உண்மையானால்

(02ஆம் பக்கம் பார்க்க)

## படகில் இத்தாலியைச் சென்றடைந்த 100 இலங்கையர்கள் சிக்கினர்!

பாலர்மோ(சிசிலி),ஜன.5

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழையமுயன்ற நூறு இலங்கையர்கள் சிசிலி நகரின் கடானியாவுக்கு அருகில் வைத்து இத்தாலியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐம்பது அடி நீளமான [illegible] படகு ஒன்றில் கடானியாவுக்கு அருகே சிமென்டோ ஆற்றின் முகத்துவாரப் பகுதியில் இவர்கள் தரை இறங்கினர். அச்சமயமே இவர்கள் பொலீஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர்.

இவர்களைக் கைதுசெய்ய முனைந்த சமயம் தப்பியோடிய சிலர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாடு இன்று வரை ஒத்திவைப்பு

காத்மண்டு,ஜன.5

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பின் (சார்க்) உச்சி மாநாடு திட்டமிட்டபடி நேற்று ஆரம்பமாகவில்லை. மாநாடு இன்று சனிக்கிழமை காலையே ஆரம்பமாகும்.

இலங்கை, இந்தியா, மாலைதீவு, பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைவர்கள் வியாழன் பிற்பகல் நேபாளம் வந்து சேர்ந்துவிட்டனர்.

ஆனால் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்பரப்பில் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் முஷாரப் சீனா சென்று அங்கிருந்தே நேபாளம் வரவிருந்தார்.

எனினும் சீனாவில் இருந்து அவரது விமானம் நேபாளம் வர சீரற்ற

(02ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு,ஜன.5

அமைச்சரவையில் மிக விரைவில் முக்கிய மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சரும் ஐ.தே.கட்சியின் உப தலைவருமான காமினி அத்துக்கோறளையின் மறைவு மற்றும் சமுர்த்தி அமைச்சில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இருந்து எஸ்.பி.திஸநாயக்கா விடுவிக்கப்பட்டமை ஆகியவற்றை அடுத்தே அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

காமினி அத்துக்கோறளையின் மறைவை அடுத்து அவரது அமைச்சுப் பொறுப்புக்களை வேறு ஒருவருக்குக் கையளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதே சமயம் கமத்தொழில், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பதவியை ஏற்றுள்ள எஸ்.பி. திஸநாயக்க, மீண்டும் சமுர்த்தி

(02ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சர் போர்ப் பிரகடனமா?

### புலிகள் கடும் சீற்றம்

கொழும்பு,ஜன.5

"புலிகளைக் கொன்று ஒழிப்பதற்கு தன்னால் முடிந்த ஆகக் கூடுதலான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்" - என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறியிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் கடும் சீற்றமடைந்திருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் கூற்று புதிய போர்ப் பிரகடனமா? - என்று கேட்டு கடும் தொனியிலான ஆட்சேபனைக் கடிதம் ஒன்றை நோர்வே ஊடாக இலங்கை அரசுக்கு புலிகள் அனுப்பியிருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த சனிக்கிழமை தியத்தலாவலையில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ அக்கடமியில் 59ஆவது படைபயில் அணியினர் பயிற்சி முடிந்து

(02ஆம் பக்கம் பார்க்க)

## கிரான்குளத்துக்கு நேற்று வந்த 4 புலி உறுப்பினர்கள் கைது!

மட்டக்களப்பு,ஜன.5

மட்டக்களப்பு மாவட்டம், புதுக்குடியிருப்பில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அமைச்சர் பெ.சந்திரசேகரன், மட்டு எம்பியான ஞா.கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் தலையீட்டை அடுத்து அந்த நால்வரும் உடனடியாக விடுவிக்கப்பட்டனர். நிராயுதபாணிகளாக புதுக்குடியிருப்பு, கிரான் குளத்துக்கு நேற்று விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்களும் வந்திருந்தனர். அச்சமயம் விசேட அதிரடிப் படையினர் இவர்களைக் கைதுசெய்தனர்.

இந்த விடயம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி

(02ஆம் பக்கம் பார்க்க)

## குறிகட்டுவான் - மன்னார் பயணிகள் கப்பல் சேவை

### அடுத்த வாரமளவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தலைமன்னாருக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"எம்.வி.மகாலட்சுமி" என்ற கப்பலே இவ்வாறு பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

தற்போது கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே பேருவளை கடற்பகுதியில் தரித்து நிற்கும் இந்தக் கப்பல் இன்று அல்லது நாளை தலைமன்னார் நோக்கி புறப்படும் என்றும் -

அடுத்த வாரம் அளவில் இந்த சேவை ஆரம்பமாகும் என்றும் - கூறப்பட்டது.

அமைச்சர் மகேஸ்வரனுக்கு இந்தக் கப்பல் முன்னர் சொந்தமாக இருந்தது என்றும் -

அவர் கடந்த வருடம் இக்கப்பலை வேறு ஒருவருக்கு விற்பனை செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-3-7)

## எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் படுகொலை; எதிரிகளுக்கு விதித்த தண்டனை ஊர்ஜிதம்

கொழும்பு,ஜன.5

1989ஆம் ஆண்டில் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது எம்பிலிப்பிட்டியவில் 25 பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலய அதிபருக்கும் மற்றும் ஆறு இராணுவத்தினருக்கும் இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உறுதி செய்தது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இவர்கள் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்ற

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நல்லெண்ண சமிக்ஞைகள் மகிழ்ச்சி தருகின்றன
# சமாதான முயற்சிக்கு முழு ஒத்துழைப்பை புலிகள் நல்கி தீர்வுக்கு உழைக்க வேண்டும்
## யாழ்.ஆயர் தமிழ்ச்செல்வனுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்.ஜன.5

தற்சமயம் எடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கி, நல்லதொரு தீர்வைக்கான உறுதியோடு உழைக்க வேண்டும் என்று அன்பு அழைப்பு விடுக்கிறேன்:

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

தமிழ்ச்செல்வனுக்கு கடந்த புதனன்று அனுப்பிவைத்த கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

12ஆவது பொதுத்தேர்தல் முடிந்து புதிய அரசு பொறுப்பேற்றதோடு நீண்டகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும், சமாதானப்பேச்சை ஆரம்பிக்கவும் ஏதுவாக ஒருதலைப் பட்சமாக ஒரு மாதகால யுத்தநிறுத்தம் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தது வரவேற்கத்தக்க ஒரு நல்ல செயலாகும். இந்த நல்லெண்ண சமிக்ஞைகளை தமிழ் மக்கள் சார்பாக நாங்களும் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

தங்களது அறிவிப்பை வரவேற்கும் பாணியில் அரசும் மோதல் தவிர்ப்பை அறிவித்து, பேச்சுக்கு அனுசரணையாளராக இருந்து செயற்படும்படி நோர்வே நாட்டுக்கு அழைப்பு விடுத்தது. நோர்வே அரசும் இந்த அழைப்பினை ஏற்று பிரதியமைச்சர்-தலைமையில் பேச்சுக்கான ஏற்பாட்டாளர் குழு ஒன்றினை நியமித்திருக்கிறது. இதேவேளை நோர்வே நாட்டு மத்தியஸ்தத்துடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது விருப்பத்தைத் தெரிவித்தமை எமது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. இது எமது நம்பிக்கையை இன்னும் அதிகரிக்கும் ஒரு நல்ல திருப்பமாகும்.

இந்த முயற்சிகள் இடைநடுவில் நின்றுவிடாமல் இருக்க இரு பகுதியினரும் முழுமையாக ஒத்துழைத்து நல்ல முடிவினைக் கொண்டுவர வேண்டும். இவ்வேளையில் தாங்களும் முழுமையான ஒத்துழைப்பை நல்கி முடிவு ஒன்றினைக்காண உறுதியோடு உழைக்க வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம். மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் போக்குவரத்துப் பாதை நெருக்கடி, பொருளாதாரத்தடை போன்ற விடயங்கள் துன்பப்படும் மக்களின் அனுபவங்களை மேலும் கடினமாக்குகின்றன. இவற்றில் மிகவும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்காமல் மக்களின் நீண்டகால துன்ப, துயரங்களைக் கவனத்திற் கொண்டு மனிதாபிமான ரீதியில் செயற்படவும் நடவடிக்கை எடுக்கவும் தங்களை வேண்டுகிறோம்.

தமிழ் மக்கள் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் காத்திருக்கும் சமாதானப் பேச்சு தமிழ் மக்களின் சுதந்திரமான, பாதுகாப்பான, சுபீட்சமான எதிர்கால வாழ்வுக்கு வழிவகுக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எமது ஆலயங்களில் மக்களின் அன்றாட வேண்டுதல் இதுவே என்பதையும் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

இப்புத்தாண்டு நம்பிக்கையையும் சமாதானத்தையும் சுபீட்சமான வாழ்வையும் எல்லோருக்கும் கொண்டுவரும் ஆண்டாக இருக்க வாழ்த்துகின்றோம். - என்றுள்ளது.

(க-3)

## யாழ்.ஆஸ்பத்திரியில் மீண்டும் பணம் செலுத்தி தங்கும் வார்ட்!
### விரைவில் செயற்படத் தொடங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணம் செலுத்தி தங்கிச் சிகிச்சை பெறும் விடுதி வசதி மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தனியார் கட்டடம் ஒன்றில் இந்த விடுதியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடுதியில் தங்கி இருந்து சிகிச்சைபெற விரும்புவோர் அதற்கு கட்டணம் செலுத்தவேண்டி இருக்கும். நோயாளிக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் தனியான வசதிகள் அங்கு செய்யப்பட்டிருக்கும்.

நீண்டகாலத்துக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த விடுதி வசதி செய்யப்பட்டிருந்தது. சுமுக நிலைமை சீருலைந்ததையடுத்து அது மூடப்பட்டுள்ளது.

(ஐ-15)

### கிரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் ஞா.கிருஷ்ணபிள்ளைக்குத் தகவல் கொடுத்தனர்.

மட்டக்களப்பு பிரதேச விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியுடன் அவர் உடன் தொடர்புகொண்டார். நான்கு புலி உறுப்பினர்களும் களுவாஞ்சிக் குடியில் அலுவலகம் ஒன்றைத் திறக்க முற்பட்டபோதே கைது செய்யப்பட்டனர் என்று அவரிடம் எம்.பி. விளக்கிக் கூறினர்.

இந்த விடயத்தை கிருஷ்ணபிள்ளை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் கே.சந்திரசேகரனின் கவனத்துக்கும் கொண்டுவந்தார். அமைச்சர் சந்திரசேகரன் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு துரித நடவடிக்கை மேற்கொண்டார்.

அதைத் தொடர்ந்து அதிரடிப் படையினர், நால்வரையும் காத்தான்குடி பொலீஸில் ஒப்படைத்தனர். பின்னர் நால்வரும் பொலீஸாரால் விடுவிக்கப்பட்டனர். (க-3)

### சார்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலை குறுக்கே நின்றது. இதனால் பயணம் தடைப்பட்டது. அதன் காரணமாக உச்சி மாநாட்டின் ஆரம்பம் இன்று சனிக்கிழமையே ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

*(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)*

### படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் உள்ள பூங்காவில் ஒளிந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும், அவர்களையும் கைது செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

(க-3-4-ரி)

### மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் நடத்தவிருக்கும் பேச்சுக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எவ்வித நிபந்தனையும் இன்றி அரசு விடுதலைப் புலிகளுடன பேச்சுக்களை ஆரம்பிப்பதால், புலிகள் பலம் வாய்ந்தவர்களாகிவிடுவர்.

மோதல் தவிர்ப்பு, பொருளாதாரத் தடை நீக்கம் ஆகியன புலிகளுக்கு சாதகமான நடவடிக்கைகள் ஆகும். அவர்கள் ஆயுத தளபாடங்களைச சேகரித்து மீண்டும் யுத்தத்தில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

சமாதான முயற்சி என்று கூறிக்கொண்டு புலிகளின் நிபந்தனைகள் எல்லாவற்றையும் ஏற்பது நாட்டில் பயங்கரவாத சூழ்நிலையை ஆதரிப்பதாகவும், நாட்டுப் பிரிவினைக்கும் வழிசமைப்பதாகவும் அமைந்துவிடும்.

புலிகளுக்கு பல நிவாரணங்களை வழங்கும் அரசு, தெற்கில் உள்ள மக்களுக்கும் நிவாரணங்களை வழங்க வேண்டும் - என்றார் அவர். (க-3)

### வடக்கு - கிழக்கில் உயிரிழந்த
## இந்திய அமைதிப் படையினர் ஞாபகார்த்த நினைவுத் தூபி!

கொழும்பு,ஜன.5

1987 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் உயிரிழந்த இந்திய அமைதிப்படையினரின் ஞாபகார்த்தமாக நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முப்படைகளினது கூட்டு நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதி ஜெனரல் றொகான் தலுவத்த, இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் ஊடாக விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அனுமதி வழங்கியுள்ளார் எனக் கூறப்பட்டது.

இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக்காப்பதற்காக இந்தியப் படையினர் மேற்கொண்ட தியாகத்தை கௌரவிக்கும் முகமாக இந்த நினைவுத்தூபி அமைக்கப்படவுள்ளது என அரசுத்தரப்பு அறிவித்துள்ளது.

1987 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் ஆயிரத்து 300இற்கும் அதிகமான இந்தியப் படையினர் உயிரிழந்தனர் என்பதும், மூவாயிரத்துக்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-7)

## வேண்டாம் நிலக்கண்ணிகள்! தெற்கில் கையெழுத்து வேட்டை!!

கொழும்பு,ஜன.5

யுத்த நடவடிக்கைகளின் போது நிலக்கண்ணிகளின் பாவனையைத் தடைசெய்யுமாறு கோரி 20 லட்சம் பேரின் கையொப்பங்களைச் சேகரிக்கும் போராட்டம் ஒன்று நேற்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிலக்கண்ணிகளுக்கு எதிரான அமைப்பும், பல சமூக சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இவ்வாறு சேகரிக்கப்படும் கையொப்பங்களின் பிரதிகள் அடுத்த மாதமுற்பகுதியில் இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் மற்றும் ஐ.நா. சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்-

நிலக்கண்ணிகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனங்களை அனுசரித்து நடக்குமாறு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்பும் கேட்டுக் கொள்ளப்படும் என்றும் -

கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-7-ரி)

### எம்பிலிப்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர்கள் பி.எச்.கே.குலதிலக, ராஜா பெர்னான்டோ ஆகியோர் நிராகரித்துத் தீர்ப்பு வழங்கினர்.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிரான வழக்கு நான்கு வருடங்கள் நடைபெற்றன. ஆள்களைக் கடத்தியமை, காணாமற்போகச் செய்தமை உட்பட எண்பது குற்றச்சாட்டுகளில் எதிரிகள் ஏழு பேரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

கண் கண்ட சாட்சியங்கள் இல்லாத நிலையில் பெரும்பாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிய சாட்சியங்களின் அடிப்படையில் மேல் நீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருந்ததால் அது தொடர்பான மேன்முறையீடு குறித்து எத்தகைய தீர்ப்பு வழங்கப்படும் என்று சட்ட வட்டாரங்களில் ஆவல் நிலவியது குறிப்பிடத்தக்கது.

கடந்த மே 2ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 12ஆம் திகதி வரை 52 நாள்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகள் நடந்தன.

எதிரிகளின் மேன்முறையீடு நேற்று நிராகரிக்கப்பட்டிருப்பதால் அவர்களின் தண்டனைக்காலம் நேற்று முதல் ஆரம்பமாகும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புத் தெரிவித்தது.

எதிரிகள் ஏற்கனவே நான்கு ஆண்டுகள் தடுப்புக்காவலில் இருந்துள்ளமையால் அவர்களின் தண்டனைக்காலத்தைக் குறைக்க வேண்டும் என எதிரிகளின் சட்டத்தரணிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. (உ-4-ரி)

### பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பாதுகாப்பு அமைச்சர் மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார்.

"இந்த நாட்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்காக ஆயுதம் மற்றும் வேறு வழிகளிலான உதவிகள் அனைத்தையும் ஆயுதப்படைகளுக்கு அரசு வழங்கும்" - என்று மாரப்பன அங்கு தெரிவித்திருந்தார்.

இந்தப் பேச்சே புலிகளை கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றது:

"அமைச்சர் மாரப்பனவின் போர் வெறி முழக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் மீது நம்பிக்கை வைப்பதற்கு உதவமாட்டாது" - என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் என்று புலிகளோடு நெருங்கிய வட்டாரங்கள் குறிப்பிட்டன.

போர் தொடராமல் தடுப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் மாரப்பனவின் இதுபோன்ற கருத்துக்கள் சர்ச்சைக்குரியனவாக அமையும் என்றும் விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

சர்ச்சைக்குரிய உரையை மாரப்பன நிகழ்த்திய நிகழ்ச்சியில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராக நியமனம் செய்யப்படுவார் என்றும் கூறப்பட்டது.

அனேகமாக எதிர்வரும் 10ஆம் திகதிக்கு இடையில் இத்தகைய மாற்றங்கள் இடம்பெறக்கூடும் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - தற்போது அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக இருக்கும் கருணாசேன கொடித்துவக்கு, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மஹிந்த சமரசிங்க, மிலிந்த மொறகொட, ரவி கருணாநாயக்க ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்களாக பதிவு உயர்வு பெறுவர் என தெரிகின்றது. (க-8)

### நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் - தமிழர் பகுதியில் ஏற்படுவது அவசியம்.

பொருளாதாரத் தடை முழுமையாக நீக்கப்பட்டால்தான் மக்களின் கஷ்டங்கள் முற்றாக நீங்கும். பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டிருக்கின்றது. ஆறு பொருள்களுக்கு இன்னும் முற்றாகத்தடை உள்ளது. பொதுமக்களுக்கு அத்தியாவசியமான நான்கு பொருள்களுக்கு கட்டுப்பாடு தொடர்கின்றது. அதுகுறித்து விளக்கம் இல்லை. கட்டுப்பாட்டில் உள்ள பொருள்கள் எந்த அளவில் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும் என்பதும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. இந்தப்பொருள்களை - மக்களின் தேவைகளுக்கேற்ப - கூடுதலாக எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவது அவசியம்.

மீன்பிடித் தடை முற்றாக அகற்றப்படுவது அவசியம். நேர எல்லை, கடல் தூர எல்லை என்ற கட்டுப்பாடுகள் ஏதும் விதிக்கப்படாமல் சுயாதீனமாக கடற்றொழிலைச் செய்வதற்கு அனுமதிக்கவேண்டும்.

மக்களின் பிரயாணம், நடமாட்டம் என்பன பாஸ் கெடுபிடி போன்றவற்றால் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றாலும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியான நிலையில் காத்திரமான பேச்சுக்களை நடத்துவதும், பயனுள்ள முடிவுகளைக் காண்பதும் எப்படி?

- இவ்வாறு நோர்வேக் குழுவிடம் தாம் தெரிவித்ததாக பாலசிங்கம் சொன்னார்.

"பேச்சுக்கு முன்னர் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு பேச்சுக்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். பேச்சு மேசைக்கு நாங்கள் செல்வதற்கு முன்னர் எங்கள் இயக்கம் மீதான தடையை அரசு நீக்கியிருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாங்கள் பேச்சுக்கு வரமுடியும்" - இப்படி நோர்வேக் குழுவிடம் தெளிவாகத் தான் கூறியதாக அவர் சொன்னார்.

தற்போது தனித்தனியாகப் புலிகளாலும் அரசாலும் அறிவிக்கப்பட்டிருக்கும் யுத்தநிறுத்தம் மற்றும் மோதல் தவிர்ப்பு ஆகியவற்றை இரு தரப்பிலும் இணக்கமான ஒரு யுத்த நிறுத்த ஏற்பாடாக மாற்றிக்கொள்வதன் அவசியத்தையும் தான் வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

#### நோர்வேத் தரப்பினர் வழங்கிய பதில்

"நாங்கள் அடுத்த வாரம் கொழும்பு செல்கிறோம். இலங்கை அரசுடன் பேசுவோம். உங்கள் நிலைப்பாட்டை அரசுக்கு எடுத்துக் கூறுவோம். அரசு தரும் தகவல்களுடன் மீண்டும் உங்களை வந்து சந்திப்போம்" - என்று நோர்வே அனுசரணைக்குழுவினர் புலிகள் தரப்பிற்கு உறுதியளித்தனர் என்று தெரியவருகிறது.

"பேச்சு சுமுகமாக நடந்தது; பயனுள்ளதாக அமைந்தது" - என்றும் நோர்வேத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

நோர்வே அனுசரணைக்குழுவினர் எப்போது இலங்கைக்கு வருவர் என்ற விவரம் எதிர்வரும் திங்கட்கிழமை புலிகளுக்கு அறிவிக்கப்படும் என்று அறியவந்தது. (உ)

### உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை உடன் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் படியும் -

யாழ். பொலீஸ் அத்தியட்சகருக்கு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று எழுத்துமூலம் உத்தரவு பிறப்பித்தார். மேற்படி தாக்குதல் மற்றும் இரட்டைப் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தினால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் நமதனராஜன், ஈ.பி.டி.பி. ஊர்காவற்றுறை இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன் ஆகியோர் ஊர்காவற்றுறை பொலீஸ் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இல்லை என்று பொலீஸார் கடந்த புதனன்று நீதிமன்றத்தில் தெரிவித்ததும் -

அதேசமயம் இருவரும் தீவகத்தில் உள்ள பல பாடசாலைகளிலும் தங்குதடையின்றி உலாவந்து கொண்டிருந்தனர் என்று நேற்றைய உதயனில் செய்தி வெளியானதும் - தெரிந்தவையே.

இந்தச் செய்தியைச் சுட்டிக்காட்டியே யாழ். பொலீஸ் அத்தியட்சகருக்கு நேற்று யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா எழுத்து மூல உத்தரவைப் பிறப்பித்தார். (உ)

## வெளிநாட்டு செய்தித் துளிகள்

ஜகார்த்தா,ஜன.5
இந்தோனேஷியாவின் இரியன் ஜயா மாகாணத்தின் பெயர் பபுஆ என்று மாற்றப்பட்டுள்ளது. அரசின் இந்தத் திடீர் முடிவால் எந்தப் பெயரைப் பயன்படுத்துவது என்பதில் அதிகாரிகளிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

* * *

மணிலா,ஜன.5
தனது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை குலைக்க முற்படவேண்டாம் என்று பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயா எதிர்க்கட்சியினரை எச்சரித்துள்ளார்.
பிலிப்பைன்ஸ் தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். அப்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

* * *

தாய்பேய்,ஜன.5
தாய்லாந்தில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டையொட்டிய 6 நாள் விடுமுறைத் தினங்களில் மட்டும் வீதி விபத்துக்களில் 500 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

* * *

நியூயோர்க்,ஜன.5
அமெரிக்கப்படைகள் தமது குண்டு வீச்சுப் பயிற்சிகளுக்காக விக்குயஸ் தீவுகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு கோரி புருட்டோர் றிகன் என்பவர் தாக்கல் செய்திருந்த மனுவை அமெரிக்க நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

* * *

வாஷிங்ரன்,ஜன.5
நோய் எதிர்ப்புசக்திக் கலங்களைத் தூண்டச் செய்வதன் மூலம் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் புதிய சிகிச்சை முறை ஒன்றை அமெரிக்க டாக்டர்கள் வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளனர்.

* * *

வாஷிங்ரன்,ஜன.5
ஆப்கானிஸ்தான் தொடர்பான விவகாரங்களைக் கையாளவென விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் நியமித்துள்ளார். ஆப்கான் - அமெரிக்க விவகாரங்களில் அதிக அனுபவம் வாய்ந்தவரான மூத்த அதிகாரி சல்மாய் கலில்சாட் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

நியூயோர்க்,ஜன.5
நியூயோர்க் நகரின் புதிய மேயராக கோடீஸ்வரரான மைக்கேல் புளூம்பேர்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பதவியேற்ற பின்னர் நகர மன்ற மண்டபத்தில் தனது முதலாவது உரையில் நியூயோர்க் நகரை மீண்டும் கட்டியெழுப்பப் போவதாகத் தெரிவித்தார்.

* * *

ஜகார்த்தா,ஜன.5
இந்தோனேஷியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கிழக்குத் திமோர் இருந்தபோது அங்கு இந்தோனேஷிய இராணுவத்தினர் மேற்கொண்ட பெரும் மனிதப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதாக இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

* * *

புதுடில்லி,ஜன.5
ஆப்கானிஸ்தானுடனான தொடர்புகளை விரிவுபடுத்தும் வகையில் தலைநகர் காபூல் ஊடாக ஈரானுக்குச் செல்லும் இரு வழி விமானப் போக்குவரத்துக்கான ஒப்பந்தம் ஒன்றை இந்தியா ஈரானுடன் செய்துகொண்டுள்ளது. விரைவில் இந்த விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

* * *

கோலாலம்பூர்,ஜன.5
மலேஷியாவின் முன்னாள் துணைப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக அவருக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு மலேஷிய உயர் நீதிமன்றம் காலக்கெடு விதித்துள்ளது.

* * *

காபூல்,ஜன.5
ஆப்கானிஸ்தானில் வடக்குக் கூட்டணிப் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட 269 தலிபான்களை ஆப்கான் அரசு விடுதலை செய்துள்ளது. புதிய பிரதமர் ஹமீட் ஹர்சே இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினார். (ம)

## அமெரிக்காவின் அழுத்தத்தையும் மீறி

# மேற்குக்கரைப் பகுதிகளில் இஸ்ரேலியப் படை தேடுதல்

ஜெருசலேம்,ஜன.5
மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஜெருசலேமில் தங்கியுள்ளபோதும், சமாதான ஏற்பாடுகளைப் புறக்கணித்து இஸ்ரேல் மேற்குக்கரைப் பகுதிகளில் தேடுதல்களை நேற்று ஆரம்பித்துள்ளது.

"திட்டமிட்ட வகையில் இஸ்ரேலியப் படைகள் தீவிரவாதத்துக்கு எதிரான போரை மீண்டும் ஆரம்பித்துள்ளன. பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தீவிரவாதிகளின் கோட்டையாக விளங்கும் ரெல் கிராமத்தை முற்றுகையிட்டுள்ள படையினர் அங்கு தேடுதல்களை நடத்தி வருகின்றனர்"

- என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் படைகள், டாங்கிகள் உட்பட 15க்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்திறங்கி நகரத்தைச் சுற்றிவளைத்துள்ளதாக நகர மேயர் அட்னன் ஸிவி நகரில் இருந்து தொலைபேசியில் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் சூட்டுச் சத்தங்களைத் தான் கேட்டதாகவும் - இஸ்ரேலியப் படைகள் அதிகார பூர்வமற்ற ஊரடங்குச் சட்டத்தை அங்கு பிறப்பித்துள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஸினி நேற்றுக் காலை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை அவரது பண்ணை இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய சற்று நேரத்தில் இஸ்ரேலியப் படைகளின் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஸினி நேற்று பின்னிரவில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தையும் சந்தித்துப் பேச இருந்தார்.

இதேவேளை -

ரெல் நகரத்தில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்று வருவதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது. அந்தச் சண்டையில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்; வேறு மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் அது தெரிவித்தது. தொடர்ந்தும் அங்கு சண்டை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.



பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இஸ்ரேலிய சோதனைநிலை

# பிரபாவை ஒப்படைக்கும்படி இந்தியா நிபந்தனை விதிக்கவேண்டுமாம்!

## வாழப்பாடி ராமமூர்த்தியின் விநோத கோரிக்கை

இலங்கை அரசு, புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைத்தால்தான் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசு உதவி செய்யவேண்டும் என்ற முன் நிபந்தனையை இந்தியா விதிக்க வேண்டும்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி. இதுபற்றி அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பிரபாகரனை இந்திய அரசிடம் இலங்கை அரசு ஒப்படைக்கவேண்டும். இதனை இந்தியா வலியுறுத்தாவிடின் தீவிரவாதிகள் பிரச்சினையில் இந்தியா இரட்டைநிலை கொண்டிருப்பதாகவே கருதப்படும்.

புலிகள் மீதான தடையை நீக்கி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயன்றுவருகிறார். இது சம்பந்தமாக டில்லிக்கு விஜயம் செய்து இந்திய ஆதரவைக் கோரியிருக்கிறார்.

புதிய அரசின் சமாதான முயற்சிகளை வரவேற்கிறோம். இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும். தமிழர்கள் எந்தப் பிரச்சினையும் இன்றி வாழவேண்டும் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.(ம)

# தலிபான் தலைவர் ஓமரை ஒப்படைப்பதற்குத் தயார்!

## அவரது சகாக்கள் தெரிவித்ததாக அறிவிப்பு



தலிபான் தலைவர் ஓமர்

காபூல்,ஜன.5
தலிபான்களின் பெருந் தலைவர் முல்லா மொஹமட் ஓமரை தம்மிடம் ஒப்படைக்க அவரது ஆதரவாளர்கள் தயாராகி விட்டதாக ஆப்கானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓமரை ஒப்படைப்பது குறித்து தலிபான்களுடன் நடத்திய பேச்சுக்கு அவர்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. ஆனால் அதற்குப் பதிலாக அமெரிக்க விமானங்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் விமானக் குண்டுவீச்சை உடன் நிறுத்தவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

- இவ்வாறு ஆப்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் முல்லா ஓமரை ஒப்படைப்பதற்காக தலிபான்களுடன் எந்தப் பேச்சுக்களையும் நடத்தத் தயாராயில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

முல்லா ஓமர் மறைந்துள்ளதாகக் கருதப்படும் கந்தகாரின் வடமேற்குப் பகுதியிலுள்ள பஹ்ராம் மலைப் பகுதியில் அமெரிக்க விமானங்கள் தொடர்ந்தும் குண்டுமாரி பொழிந்து வருகின்றன.

"பஹ்ராம் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும் ஓமரைத் தேடி அமெரிக்கப் படைகள் தீவிர சோதனை நடத்தி வருகின்றன" - என்று கந்தகார் உளவுத்துறைத் தலைவர் ஹாஜி குலானி சொன்னார்.

முல்லா ஓமரைக் கைது செய்யும் வரை அமெரிக்கப் படைகளும் ஆப்கான் படைகளும் ஓயாது என்றும் அவர் சொன்னார்.

அமெரிக்காவால் தீவிரமாகத் தேடப்பட்டுவரும் ஒஸாமா பின்லேடன் ஆப்கானை விட்டுத் தப்பிவிட்டார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவரது நெருங்கிய சகாவான ஓமரையாவது கைது செய்வதற்கு அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் செய்கிறது என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரிட்டன் தலைமையிலான சர்வதேச உதவிப் பாதுகாப்புப் படைகள் ஆப்கானிஸ்தானில் தரையிறங்கத் தொடங்கியுள்ளன. 20க்கும் மேற்பட்ட நேட்டோ நாடுகள் இந்த சர்வதேச உதவிப் பாதுகாப்புப் படையில் அங்கம் வகிக்கின்றன. இன்னும் ஆறு மாத காலத்துக்கு ஆப்கானில் தங்கியிருக்கும் இந்தப் படையினர் அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்வெடிகள், மிதிவெடிகளை அகற்றுவதுடன் ஆப்கானை மீளக்கட்டியெழுப்பும் பணிகளிலும் ஈடுபடுவர். அது தவிர வேறு எந்தப் போர் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபடமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



ஆப்கானிஸ்தானில் தரையிறங்கியுள்ள பன்னாட்டுப் படை அதிகாரிகள் சிலர் தலைநகர் காபூலில் தம்மிடையே கலந்துரையாடுகிறார்கள்.

## வெளிநாட்டு செய்தித் துளிகள்

காத்மண்டு,ஜன.5
தெற்காசிய நாடுகளின் சார்க் மாநாடு நேற்று நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் ஆரம்பமானது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவுகள் ஆகிய 7 நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

* * *

புதுடில்லி,ஜன.5
ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயமாக தெற்காசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் நேற்று இந்தியா வந்து சேர்ந்தார். முன்னதாக நேற்றுமுன்தினம் பங்களாதேஷுக்கு விஜயம் செய்த அவர் அங்கிருந்து இந்தியா வந்துள்ளார். நாளை ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கு அவர் விஜயம் செய்வார்.

* * *

புதுடில்லி,ஜன.5
அயோத்தியில் முன்னர் மசூதி இருந்த இடத்தில் தற்போது உள்ள ராமர் கோயிலின் மாதிரியையும் உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலையும் தாம் தாக்க உள்ளதாக லஷ்கர் - ஈ - தொய்பா அமைப்பு ஈ-மெயிலின் மூலம் மிரட்டல் விடுத்துள்ளது.

* * *

புதுடில்லி,ஜன.5
உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலின் பாதுகாப்பை பொலீஸார் அதிகரித்துள்ளனர். அதனைத் தாக்கப்போவதாகக் காஷ்மீர் தீவிரவாதக்குழு ஒன்று எச்சரிக்கை விடுத்ததை அடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

* * *

புதுடில்லி,ஜன.5
வட இந்தியா முழுவதும் கடும் குளிர் நிலவுகின்றது. உத்தரப் பிரதேச மாநிலத்தில் மட்டும் குளிர் தாங்க முடியாமல் 27 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

* * *

சிட்னி,ஜன.5
ஆஸ்திரேலியாவில் கடந்த வாரம் மூண்ட காட்டுத் தீ விரிவடைந்து தலைநகர் சிட்னியை சூழ்ந்துகொண்டுள்ளது. நகரின் வடக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் பெருந் தீ எரிந்துகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. இதுவரை நகரப் பகுதியில் 140 வீடுகள் தீயில் எரிந்து தரைமட்டமாகியுள்ளன.
தீயைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். 100இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகளும் ஹெலிகளும் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டபோதும் தீ கட்டுக்கடங்காமல் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கின்றது.

* * *

ஹொங்கொங்சிற்றி,ஜன.5
சீன சிறுவர்களைத் தமது பாடசாலைகளில் சேர்ப்பதை ஹொங்கொங் தடைசெய்துள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் தெரிவித்துள்ளன. கொம்யூனிஸ ஆட்சியின் கீழ் இருக்கும் சீன பெரு நிலப்பரப்பில் உள்ள பெரும்பாலான பெற்றோர்கள் தமது குழந்தைகளை ஹொங்கொங் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு முண்டியடிப்பதை அடுத்து இந்த நடவடிக்கையைத் தாம் மேற்கொண்டதாக ஹொங்கொங் நிர்வாகம் தெரிவித்தது.

* * *

லண்டன்,ஜன.5
தென்பசுபிக் தீவான வனுவாட்டுவில் சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தப் பூமியதிர்ச்சியால் அங்கு பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. ஒருவர் மட்டுமே சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

* * *

றியாட்,ஜன.5
சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான ஜெற் போர் விமானங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அவற்றில் இருந்த இரு விமானிகளும் உயிரிழந்தனர்.
விமானப் படைக்குச் சொந்தமான 'எவ்-15 ஈகிள்' ஜெற் விமானமும் இரவு நேரப் பறப்புப் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படும் ஜெற் விமானமுமே மோதி விபத்துக்குள்ளானதாக சவூதி பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார். தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் அவர் கூறினார். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

62,செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்த பிறைசூடி என்பவருடைய மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரைக்ஸ், லைசன்ஸ், திறப்புக்கோர்வை என்பன யாழ்.பஸ்நிலையத்துக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முருகானந்தன் ஸ்ரோர்ஸ், 219,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (96682)

அழகாபுரி காரைநகரைச் சேர்ந்த நவரத்தினம் நவரூபன் என்பவருடைய தே.அ.அ. (இல.790123816V), விசேட அ.அ. (இல.091300138) என்பன வழக்கம்பரை அம்மன் கோயிலுக்கும் சுழிபுரத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுழிபுரம் சந்தி, கஜமுகன் தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (96692)

அன்பளிப்பு மோதிரம் (சிவப்பு நீலம் எனாமல்) ஒன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 01.01.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரவிஜயா, வேலக்கை பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96630)

## ENGLISH CLASSES

O/L, A/L, G.A.Q., B.A. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகின்றன. அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (96688)

ஆண்டு 6 தொடக்கம் G.C.E. A/L 2003, 2004 வரை ஆங்கில வகுப்புகள் உடன் ஆரம்பமாகும். G.C.E. O/L மாணவர்களுக்கு ஆங்கில இலக்கிய வகுப்புகளும் Special English Course E.S.L. (G.A.Q.) வகுப்புகளும் நடைபெறும். தொடர்பு:- திரு.அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி. (96690)

## பயிற்சி வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல், தலை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்: 14.01.2002 1.30க்கு (புதிய நேரம்). அதற்கு முன் பதிவு செய்யவும். S.கீர்த்தனா, சிவன்கோயிலடி, மயிலணி, சுன்னாகம். (96520)

## விற்பனைக்கு

ஒரு தடவை குட்டிகள் ஈன்ற நல்ல பராமரிப்பிலுள்ள தரமான டாஸ் ஹண்ட் (Original DACHS - HUND) தாய் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.பத்மதேவா, சுதுமலைச் சந்தி, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். T.P.NO.3406. (96635)

பொமனேரியன் (பூச்சி நீக்கியது) நாய்க்குட்டிகளும், விறாத்துக் குஞ்சுகளும், பலவர்ண லவ்பேட்ஸ்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பிருந்தாவனன், மூணாமலை வீதி, சுதுமலை மேற்கு, அம்மன் கோயிலடி, மானிப்பாய். (95672)

## லவ்பேட்ஸ் குருவிகள் விற்பனைக்கு

லவ்பேட்ஸ் குருவிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: பி.திலீபன், மூணாமலை ஒழுங்கை, சுதுமலை அம்மன்கோயிலடி. (96671)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் (1Kg 140/=), கல்பேட் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம், மற்றும் 2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96691)

புறொயிலர் கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் வேண்டிய நிறையில் மலிவு விலையில் தினந்தோறும் கிடைக்கும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (பலாலி றோட்). (96693)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (96618)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

சமீரா பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை 6மணிக்கு விநியோகிக்கப்படும். தொடர்பு:- றாஜீவ் ஆனைக்கோட்டை சந்தி. T.P.No: 3529, 2867. (96683)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், விறாத்துச் சேவல் குஞ்சுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவகுமார். பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்ச் சந்தி. (96664)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

திங்கட்கிழமை பிறிமா சிவப்பு 70/-, வெள்ளை 60/-, சேலான் புறொயிலர்40/-, என்ரோபெயர் மருந்து 6/- விலைகளில் விநியோகிக்கப்படும். முன்பதிவு அவசியம். தொடர்பு: வை.சிவகுமார் இல. 461, நாவலர் வீதி அல்லது கிளீன்சொட் பின்புறம் யாழ். பஸ்நிலையம். (96696)

## பாண் வாங்க பேக்கரிகளை நாடும் மக்கள்

தென்மராட்சி,ஜன.5

பாண் விலை அதிகரிப்பையடுத்து மக்கள் பேக்கரிகளுக்குச் சென்று பாண் வாங்குவதைக் காண முடிகிறது.

வர்த்தக நிலையங்களில் பாண 15 ரூபாவாக விற்கப்படுகின்றபோதிலும் பேக்கரிகளில் பாண் 14ரூபாவாக விற்கப்படுவதால் மக்கள் பேக்கரிகளுக்குப் படையெடுக்கின்றனர்.

(ஜ-117)

## அழைப்பு!

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை எதிர்வரும் 9ஆம் திகதி நெல்லியடி மாலு சந்தியில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராசசேகரம் அறிவித்துள்ளார்.

(ஜ-117)

## மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

வழ. இல:- மணநீக்கம் / 123

**வல்லிபுரம் விமலதாஸ்**
மே/பா. **கார்த்திகேசு மயூரதன்**
*இலந்தையடி ஒழுங்கை,*
*உடுவில் மேற்கு, உடுவில்.*

வழக்காளி.

எதிர்

**விமலதாஸ்** பெண் **ஜெயகௌரி**
மே/பா, **விசுவலிங்கம் நடராசா**
*மருந்துக் கலவையாளர்*
*சுதுமலை வடக்கு, சுதுமலை.*

எதிராளி.

### பின்னுறுதித் தீர்வை

மேற்படி வழக்கு 2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி திருவாளர் க. அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் எடுக்கப்பட்டபொழுது வழக்காளியும் அவரது பதிவுபெற்ற சட்டத்தரணி திரு. ச. சிவரூபன் அவர்களும் மன்றில் சமுகமாயிருக்க எதிராளியோ அல்லது அவர் சார்பாக பதிவுபெற்ற சட்டத்தரணியோ மன்றில் சமுகமாயிருக்காத காரணத்தினால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

வழக்காளியின் சாட்சியம் "வ-1" என அடையாளமிடப்பட்டு வழக்கேட்டில் அணைக்கப்பட்ட திருமணப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றை மன்று பரிசீலனை செய்ததன் அடிப்படையில் எதிராளி வழக்காளியை விட்டுப் பிரிந்து வன்ம உறவறுப்பு என்ற குற்றத்தைப் புரிந்துள்ள காரணத்தினால், வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1986ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ஆம் நாள் நடைபெற்ற பதிவுத்திருமணத்தை வெற்றும் வெறிதுமாக்கி இரத்துச் செய்யப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையானது எதிராளிக்குச் சேர்ப்பித்த நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அக்கறையுள்ள எவரேனும் இப்பின்னுறுதித் தீர்வையினை ஏன் முற்றான தீர்வையாக்கப்படாது என காரணம் காட்டத்தவறின் இப்பின்னுறுதித் தீர்வை முற்றாக்கப்பட்டு முற்றான தீர்வையாக்கப்படும்.

2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06ஆம் நாள்.

என்னால் வரையப்பட்டது

**ச.சிவரூபன்**
**வழக்காளியின் சட்டத்தரணி.**

**பா.சுப்பிரமணியம்**
**மாவட்ட நீதிபதி,**
**மல்லாகம்.**

மேற்கூறப்பட்டவை மல்லாகம் மாவட்ட/நீதிவான் நீதிமன்ற வழ. இல:மணநீக்கம்/123இல் கோவையிடப்பட்ட பின்னுறுதித் தீர்வையின் உண்மைப் பிரிதி என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

**செ.விக்னேஸ்வரமூர்த்தி**
**பதிவாளர்/ப.பிஸ்கால்/சமாதான நீதிவான்**
***மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.*** (96704)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் பொன்னையா கணேசலிங்கம்**
**(முகாமையாளர், மக்கள் வங்கி பருத்தித்துறை நீடித்த கருமபீடம்)**

*வங்கி வரலாற்றில் காவியம் நீ படைத்தாய்!*
*வாடிக்கையாளர்களின் அகமும் குளிர வைத்தாய்!*
*விதியின் சதியிதுவோ விண்ணவர் தம் பெருவிருப்போ!*
*வாழும் வயதிருக்க வானுலகம் சென்றுவிட்டாய்....!*

அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்திஅடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி, (பரு) நெல்லியடி.

(96697)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழக
நடனத்துறை விரிவுரையாளர்
**திருமதி கிருஷாந்தி இரவீந்திரா**

அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முதலாக பரதநாட்டியத்துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இராமநாதன் நுண்கலைத்துறை
விடுதி மாணவர்கள், யாழ்.பல்கலைக் கழகம்

(96663)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் முன்னாள் அங்கத்தவரும்,
புகழ்பூத்த இரசாயனவியல் ஆசானுமாகிய
**ஆ.மகாதேவன்**

அவர்களின் இழப்பு எமக்கு ஆழ்ந்த துயரத்தைத் தருகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிவஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/19036)

## கண்ணீர் அஞ்சலி

*எமது கழகத்தின் முன்னாள் அங்கத்தவரும்,*
*சிறந்த ஆசானுமாகிய*
**திரு.வே.சுந்தரதாஸ்**

அவர்களின் இழப்பு எமக்கு ஆழ்ந்த துயரத்தைத் தருகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிவஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.*

(C/19035)

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை மக்கள் வங்கியின் முகாமையாளரான
**பொன்.கணேசலிங்கம்**

**அவர்கள் 03.01.2002இல் காலமாகிவிட்டார். அவரது பிரிவால் துயரமடைகின்றோம். அத்துடன் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

ஆத்மா சாந்தி அடைவதாக.

**சிவா ரேடிங் கோ,**
**சிவராஜ் ரேடிங் கோ**
**பருத்தித்துறை.**

(96699)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியர்
திருமதி சற்குணதேவி கணேசலிங்கம்
அவர்களின் அன்புத் துணைவர்
**பொன்னையா கணேசலிங்கம்**
*(முகாமையாளர், மக்கள்வங்கி, பருத்தித்துறை)*

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/வடமராட்சி
இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்
பருத்தித்துறை.

(C/19028)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்/இரசாயனவியல் மாணவர்களின்
கலங்கரைவிளக்காகத் திகழ்ந்த ஆசிரிய மணி
**அமரர் ஆறுமுகம் மகாதேவன்**
அவர்களுக்கு எமது இதய அஞ்சலி.
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.
அவரின் ஆன்மா இறைவன் திருவடி சேர
நாமும் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(96700)

உதயன்

## பேச்சின் எதிர்காலம்

அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் ஒருமாத காலத்துக்கு யுத்தநிறுத்தம் ஒன்றை ஒரு தலைப்பட்சமாக அறிவித்தனர். இலங்கை அரசும் தன்னுடையபாட்டில் ஒருமாத காலத்துக்கு மோதல் தவிர்ப்பை பிரகடனப்படுத்தியது.

இந்த இரண்டு அறிவிப்புகளையும் ஒருங்கிணைத்து - பொதுவான - முறையான - யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றை, புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை, இருதரப்பினருக்கும் இடையில் உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அமைதிப் பேச்சுகள் தீர்க்கமானதாகவும், நிரந்தரத் தீர்வை எட்டும் இலக்கை நோக்கித் தங்குதடையின்றி முன்னேறுவதாகவும் அமைவதற்கு பேச்சு நடவடிக்கைகளின்போது இருதரப்பும் - வேறு இழுபறிகளில் கவனம் செலுத்தாமல் - நிரந்தரத் தீர்வுக்கான இலக்குக் குறித்து மட்டுமே சிந்தித்துச் செயலாற்றக் கூடிய சூழ்நிலை நிலவுவது அவசியம்.

அத்தகைய நிலைமை ஏற்படாமல் குழப்பக்கூடிய அம்சங்கள் இரண்டு.

ஒன்று - தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்.

இரண்டாவது - இராணுவ அமைதி நிலையில் பாதிப்பு.

இந்த இரண்டினாலும் ஏற்படக்கூடிய சிறிய குழப்பங்கள்கூட அமைதிப் பேச்சைச் சின்னாபின்னமாக்கும் விபரீதத்தை ஏற்படுத்திவிடலாம்.

எனவே அமைதிப் பேச்சுக்காக இருதரப்பும் கதிரையில் அமர முன்னர் இந்தப் பிரச்சினைகள் குறித்து 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' சில முடிவுகளை முன்கூட்டியே எடுத்துத் தீர்மானித்துக்கொள்வது நல்லது.

இதைத்தான் அமைதிப் பேச்சுக்கான உகந்த - நல்லெண்ண - புறச் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நீண்ட பல வருடங்களாக வலியுறுத்திவந்தார்.

அவரின் கருத்தை முன்னைய சந்திரிகா அரசு திரித்து, அவர் அமைதிப் பேச்சுக்கு முன்நிபந்தனை விதிக்கின்றார் என்று கூறி பேச்சுக்கான வாய்ப்பைக் குழப்பிவந்தது.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசு அமைதிப் பேச்சுக்கு இந் நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு அதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்திருப்பது சமாதானத்துக்கான தேடலில் நல்லதோர் அறிகுறி.

இலங்கை அரசின் அரசியல் தலைமைத்துவம் இந்தவிடயத்தில் தீர்க்கமான - தெளிவான - முடிவுகளை எடுக்க முன்வந்தாலும் அதன் பின்புலத்தில் இருக்கும் அதிகார வர்க்கமும், படைத்தரப்பும் இந்தத் திசையில் அந்தத் தலைமைத்துவம் நேர்சீராக முன்னேறுவதற்கு அனுமதிக்குமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

பேச்சுகள் சுமுகமாகத் தொடர்வதை உறுதிப்படுத்துவதற்காக யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றை - புரிந்துணர்வு அடிப்படையில் - புலிகளுடன் அரசுத்தரப்பு செய்துகொண்டாலும் அது வெற்றிகரமாகச் செயற்பட படைத்தரப்பும் பொலிஸாரும் அனுமதிப்பார்களா என்பதுதான் கேள்வி.

அரசியல் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தமிழ்க் கட்சி (இயக்கம்) ஒன்றின் இராணுவப் பொறுப்பாளர் ஒருவருக்கும், பிரதேச சபைத் தலைவர் ஒருவருக்கும் நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அந்த இயக்கம் இப்போதைய அரசில் இடம்பெற்றுக்கூட இருக்கவில்லை. எனினும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அந்த இருவரும் வெகு சுதந்திரமாக - 'சிம்பிள்' ஆக - உலா வருவதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் பொலிஸாரோ நீதிமன்றத்தின் முன்னால்வந்து; அந்த இருவரும் அந்தப் பிரதேசத்திலேயே இல்லை என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பதுபோல கதை விட்டு விட்டுப் போகும் நிலைமை.

இத்தகைய துணைப் படையை அரவணைத்து வைத்திருக்கும் படைகளையும் பொலீஸையும் வைத்துக்கொண்டுதான் ரணிலின் அரசு புலிகளுடன் யுத்தநிறுத்தம் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்போகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அரசு - புலிகள் இடையே இணக்கம் ஏற்படுவதை இயல்பாகவே விரும்பாத இந்தத் துணைப் படைகள் இருதரப்பு யுத்தநிறுத்த காலத்தில் எப்படிச் செயற்படப்போகின்றன, அவற்றை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வலிமை அரசின் அரசியல் தலைமைத்துவத்துக்கு உண்டா என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

'ஆசாரி இடம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்குமா?' - இதில்தான் யுத்தநிறுத்தம் மற்றும் அமைதிப் பேச்சுகளின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# யாழ்.பிரதேச செயலக பிரிவில் 2 பாடசாலைகளில் படையினர்!

## மீள இயங்கவைக்க முடியாதநிலை

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள இரு பாடசாலைகளில் படையினர் முகாமிட்டிருப்பதால் அந்தப் பாடசாலைகளை மீள இயங்கவைக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத்துறை சென்.ஜோசப் மகா வித்தியாலயம், துரையப்பா மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலுமே படையினர் முகாமிட்டுள்ளனர். அத்துடன் ஷெல் தாக்குதல்களால் இந்தப் பாடசாலைகளின் கட்டடத்தின் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள பல வீடுகளும் படையினரால் பயன்படுத்தப்பட்டு வருவதால் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

படையினரின் பயன்பாட்டில் இல்லாத வீடுகளிலும் பொதுமக்கள் மீளக்குடியமர தயக்கம் காட்டி வருவதாக யாழ்.பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## கலந்துரையாடல்கள்

வலி.கிழக்கு,ஜன.5

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களினதும் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ.குணசிங்கம் தலைமையில நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சனசமூக நிலையங்களின் எதிர்காலச் செயற்பாடுகள், தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (ஐ-180)

* * *

யாழ்ப்பாணம், ஜன.5

அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அல்லாரையில் நடைபெறவுள்ளது என்று வித்தியாலய அதிபர் சி. ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ஐ-3)

* * *

யாழ்ப்பாணம், ஜன.5

தேசிய கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினூடாக இலங்கை மின்சார சபையில் பயிற்சிபெற்ற அனைத்துப் பயிலுநர்களுக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

புதிய வேலைத் திட்டங்கள், புதிய நிர்வாகசபைத் தெரிவு போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்துப் பயிலுநர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-9)

## புடைவை விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தொழிற்றுறைத் திணைக்களத்தால் நல்லூர் அரசடிச் சந்திக்கு அருகில் உள்ள அரசினர் நெசவுப் பாடசாலையில் கைத்தறி நெசவுப் புடைவை விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் அனைத்து விதமான கைத்தறிப் புடைவை வகைகளையும் கொள்வனவுசெய்ய முடியும் எனவும் -

கைத்தறி நெசவுப் புடைவை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்காகவே இந்த விற்பனை நிலையம் நிறுவப்பட்டுள்ளதாகவும் -

தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## நாட்டு நடப்பு

### குஞ்சாச்சி தந்த அட்டை

('தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற மெட்டில் அமைந்த பாடல்)

மஞ்சள் நிறத்திலோர் அட்டை - என்றும்
மறவாது உன்னோடு இருக்கின்ற அட்டை
நெஞ்சோடு ஒட்டிக்கொண்டுன்னை - என்றும்
நீங்காது கண்ணென காக்கின்ற அட்டை
அஞ்சாதே எனச் சொல்லி உன்னை - என்றும்
அபயம் அளிக்கின்ற அழகான அட்டை
கொஞ்சம் எழுத்தழிந்து விட்டால் - என்றும்
கோட்டில் ஏற்றத் தயங்காத அட்டை
பஞ்சாய் பழுத்துவிட்ட கிழடும் - என்றும்
பக்குவமாய் பேணிக்காக்கின்ற அட்டை
குஞ்சாச்சி தந்த இவ்வட்டை - என்றும்
கூவித் திரியும் அடிமைத் தனத்தை.

- *விகடகவி.*

# குடாநாட்டிலும் விரைவில் வங்கிக் கடன் அட்டை முறை

## இலங்கை வங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.5

சர்வதேச கடன் அட்டை (Ceybank Visa Card) மூலமான கொடுக்கல் வாங்கல்களை இலங்கை வங்கி விரைவில் குடாநாட்டிலும் அறிமுகம் செய்ய இருக்கிறது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப படுத்துவதற்காக வர்த்தக முகவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் சிந்துராசலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே இது தொடர்பாக வாததகர்களுடன் வங்கி அதிகாரிகள் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் வர்த்தகர்களிடமிருந்து பெறப்படவுள்ளன. தகுதிவாய்ந்த வர்த்தகர்கள் முகவர்களாகத் தெரிவுசெய்யப்படுவர்.

வங்கிக் கிளைகளில் நடைமுறைக் கணக்குகளை வைத்திருப்போரும், தகுதிவாய்ந்தவர்கள் என்று வங்கியால் தீர்மானிக்கப்படும் ஏனையோரும் இந்தக் கடன் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மூன்று தரங்களையுடைய இந்தக் கடன் அட்டைகளை வைத்திருப்போர் அவற்றை நாடு முழுவதும் வங்கியின் முகவர்களாக இயங்கும் 5 ஆயிரம் வர்த்தக நிலையங்களில் பணக்கொடுப்பனவுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தமுடியும். நவீன சந்தைகள், பலசரக்கு வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள், மருத்துவ மனைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பயண மற்றும் விமானப் பயண அலுவலகங்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்த முகவர் நிலையங்கள் அவற்றில் அடங்கும்.

நேரடியாகப் பணம் செலுத்தாமலேயே பொருள்களை வாங்கவும், சேவைகளைப் பெறவும் இந்தக் கடன் அட்டைகள் உதவும்.

கடன் அட்டையைப் பெற விணப்பிப்போரின் தகுதிக்கு ஏற்ப கடன் அட்டையின் பணப் பெறுமதி வரையறுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஓரிரு மாதங்களில் இந்தத் திட்டத்தை குடாநாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. (ஐ-180)

# கந்தரோடையில் 23 பேருக்கு சுழற்சி முறைக் கடன் கிடைத்தது

வலிகாமம் தெற்கு,ஜன.5

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டுவரும் சுழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் கந்தரோடை கிராம சேவையாளர் பிரிவில் இயங்கும் கந்தரோடை விவசாயிகள் சம்மேளனத்தினூடாக மூன்றாவது தடவையாக 23 பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன், கந்தரோடை கிராம சேவையாளர் கே.திருநாவுக்கரசு ஆகியோர் இந் நிகழ்வின் போது கலந்துகொண்டு பயனாளிகள் மத்தியில் உரையாற்றினர்.

ஏற்கனவே முதல்முறையாக 40 பயனாளிகளுக்கும் இரண்டாம் முறையாக 27 பயனாளிகளுக்கும் இக் கடன் வழங்கப்பட்டது. தற்போது மூன்றாவது முறையாக 23 பயனாளிகளுக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வைத்து பணம் வழங்கப்பட்டது.

இதுவரை 90 பயனாளிகள் இதன் மூலம் பயனடைந்துள்ளார்கள். கடனாளிகள் ஒழுங்கான முறையில் கடனை மீளளிப்புச் செய்தால் இன்னும் பலர் இதன் மூலம் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன் தமது உரையின்போது குறிப்பிட்டார். (ஐ-152)

## திருவாசக முற்றோதல்

மானிப்பாய்,ஜன.5

மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிலில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (ஐ-8-90)

யாழ்ப்பாணம்,ஜன.5

ஏழாலை சொர்ணாம்பிகா சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஐ-9)

## இலங்கைக்கு அமெரிக்கக் கோதுமை

கொழும்பு,ஜன.5

அமெரிக்கா இவ்வாண்டில் 63,800 தொன் கோதுமையை இலங்கைக்கு வழங்கும். சகாய விலையிலான இக்கோதுமையின் மொத்தப் பெறுமதி 74 கோடி ரூபாவாகும்.

அமெரிக்காவின் கடன் திட்டத்தின் கீழ் இது வழங்கப்படுகிறது. கடன் திட்டத்தில் தனியார் துறையினரும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இதன்படி 'பிறிமா' நிறுவனமும் கோதுமையைக் கொள்வனவு செய்ய வசதியளிக்கப்படும். (ஐ)

## சுகாதார படக்காட்சி

வலி.தெற்கு,ஜன.5

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கு சுன்னாகம் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவினரால் சுகாதாரம் தொடர்பான படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது. சுன்னாகம் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.பத்மகுமார் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி இப் படக்காட்சி இடம்பெறும். (ஐ-152)

# புலிகளின் கரங்களை அரசு பலப்படுத்துகிறது!

## ஜாதிக பிக்கு பெரமுன சீற்றம்

கொழும்பு,ஜன.5

அரசும் - விடுதலைப் புலிகளும் ஆரம்பிக்கவிருக்கும் நேரடிப் பேச்சுக்கு எதிராக ஜாதிக பிக்கு பெரமுன குரல் எழுப்பியுள்ளது.

விடுதலைப் புலிகள் முன்வைக்கும் சகல நிபந்தனைகளையும் ஏற்று அவர்களுடன் பேச்சு நடத்த அரசு முன்வந்துள்ளது. பலவீனமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகளை அரசின் செயற்பாடுகள் பலப்படுத்துகின்றன. சர்வதேச ரீதியாக முழுமையான தோல்வியை நோக்கிச் செல்லும் புலிகளுடன் பேச்சு நடத்துவதா? சகல சமூகங்களும் ஒன்று சேர்ந்து இந்தப் பேச்சு முயற்சியை முறியடிக்க வேண்டும் - என்று ஜாதிக பிக்கு பெரமுன தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்தம் செய்து புலிகள் மீதான யுத்தத்தை நிறுத்தியமை, சோதனைத் தடைகளை அகற்றி புலிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தாமல் அனுமதித்தமை, பொருளாதாரத் தடையை நீக்கியமை, நோர்வேயை மீண்டும் அனுசரணையாளராக அனுமதித்தமை, புலிகள் மீதான தடையை நீக்க முனைந்துள்ளமை ஆகிய விடயங்கள் குறித்து பெரமுன விசனம் தெரிவித்துள்ளது. (ஐ-31)

### உதயவாக்கு

நல்ல ஆலோசனையைக் கேட்பது நம் திறமையை அதிகப்படுத்தும்.

### நாளை

மார்கழி 22
ஞாயிற்றுக்கிழமை
(06-01-2002)
திதி : அட்டமி
பின்னிரவு 1.40 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல் 4.12 வரை.
சுபநேரம் : 9.31 - 11.01
ராகுகாலம் : 5.01 - 6.31
(பழைய நேரப்படி)

## பண்டத்தரிப்பு சிவாஸ் ஸ்ருடியோவின்

**25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு**
**எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கும்**
**நண்பர்களுக்கும்**
**இனிய புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்களைத்**
**தெரிவிப்பதோடு ~**

சிறந்த முறையில் கலர், கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களைப் பிடித்துக்கொள்ளவும் நவீன முறையில் கம்பியூட்டர் மிக்சிங் மூலம் வீடியோப் படங்கள் பிடித்துக்கொள்ளவும் சிறந்த ஸ்தாபனம்.

குறிப்பு: **வெள்ளிவிழாவை முன்னிட்டு எம்மிடம் வீடியோ பிடிப்பவர்களுக்கு CDயில் இலவசமாகப் பதிவுசெய்து கொடுக்கப்படும்.**



*கிளைகள்:*
1. சித்தன்கேணி
2. வட்டுக்கோட்டை.

**சிவாஸ் ஸ்ருடியோ**
பண்டத்தரிப்பு.
(96553) T.P - 070 - 212574.


# 12ஆவது ஆண்டு நினைவுப் பூக்கள்



## அமரர் நடராசா சந்திரராஜா

**மடியில்** 20-02-1948 | **மண்ணில்** 19-12-1989

திதி: 05.01.2002

அலைகடற் தோணியாய் எமைவிட்டுச் சென்று
ஆண்டுகள் பன்னிரண்டு சென்று விட்டனவே.
எம் கண்ணில் நீர் வடிந்தால் பொறுக்காதே உம்நெஞ்சம்
கதறி அழுதும் கேட்காமல் விட்டுச்சென்றீர்களே.
பாசவீணை மீட்டிய கரங்கள் பாடையில் சென்றதேனோ?
பாசம் பற்றறுத்து பரமனடி சேர்ந்தே விட்டீர்களோ?
வாழ்ந்திருந்த காலமெல்லாம் நாம் வாழ வகைசெய்து
வாழ்ந்தது போதுமென்று நீங்கள் மட்டும் சென்றீர்களோ?
இனிவரும் ஜென்மங்களிலும் எமக்கு வேண்டும் – உங்கள்
இனிய உறவு, அதுவரை நாம் காத்திருப்போம் அதற்காய்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்*
*இறைவனைப் பிரார்த்திப்போம்.*

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி - திருமதி சு.சந்திரராஜா,
பிள்ளைகள் - தினேஷன், சிவாஅனுஜா,
நிஷாந்.

*பலாலி வீதி,*
*கோண்டாவில்.* (96649)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 04 - 1977



உதிர்வு 30 - 12 - 1996

## செல்வன் அருணாசலம் சிவச்செல்வன்

**(சிவா)**

*அன்பின் இளவல் சிவச்செல்வன் ஆறாத*
*துன்பம் எமக்களித்து தன்னுயிராம் இன்னுயிரை*
*காய்ச்சல் கடும்நோய் வந்ததினால் தென்சென்றான்*
*வாடுகின்றோம் நாமெல்லாம் வா!*
*என்றும் உன் இனிய நினைவலைகளில்*
*உன் அன்பு அம்மா உன் உடன்பிறந்தோர்*
*நின் ஆத்மசாந்திக்காய் நித்தமும் நாம் வேண்டுவோமே.*

*காளிகோவில் வீதி,*
*கொடிகாமம்.*
T.P.No. 070 - 212747 (96584)
- குடும்பத்தினர்.

## மீண்டும் இயங்கும் காரைநகர் மெய்கண்டான்!

காரைநகர்,ஜன.5

கடந்த 12வருடங்களாக மூடப்பட்டிருந்த காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாடசாலையை மீள ஆரம்பித்து வைததார்.

இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பாடசாலை அதிபர் திருமதி பி.சந்திரராசா உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ம-7-73)

## முன்னாள் மாணவியின் நினைவாக புலமைப் பரிசில்

வடமராட்சி,ஜன.5

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகும் மாணவிக்கு வருடந்தோறும் அமரர் திருமதி கிரேஸ பாக்கியலட்சுமி சபாபதி (செல்வி ஆழ்வாப்பிள்ளை) நினைவுப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் இவ்வாண்டுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த பாடசாலை அபிவிருத்திச் சபை ஊடாக அமரர் திருமதி கிரேஸ் பாக்கியலட்சுமி சபாபதியின் மகன் சாம் எஸ்.ஜெயசீலன் முனவந்துள்ளார்.

அமரர் பாக்கியலட்சுமி இப் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்று பல்கலைக் கழகம் சென்ற முதல் மூன்று மாணவிகளில் ஒருவர் ஆவார்.

இதே பாடசாலையிலும் கொழும்பிலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் கடந்த வருடம் காலமானார்.

இந்நினைவுப் பரிசில் திட்டத்தில் இவ்வாண்டுக்கான புலமைப் பரிசிலை மாணவி சசி பஞ்சலிங்கம் பெற்றுள்ளார். (க-173)

## பரீட்சை மதிப்பீடு; 900 ஆசிரியர் பங்குபற்றுவர்!

யாழ்ப்பாணம்,ஜன.5

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் யாழ். மாவட்டத்தில் 900.ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர். நாடு முழுவதிலும் 96 நிலையங்களில் இந்த மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரியில் இரண்டும், யாழ். மத்திய கல்லூரியில் ஒன்றுமாக மூன்று விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (க-8)

## நல்லூரில் குமாரின் அஞ்சலிக் கூட்டம்

தியாக மாமனிதர் ஞாபகார்த்தக் குழுவினால் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவினைப் போற்றி ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலிக் கூட்டம் இன்று பி.ப. 2.30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் யாழ்.ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு முன்பாக பிற்பகல் 2 மணியளவில் தியாகியின் திருவுருவப்படம் நல்லூர்க்கந்தன் ஆலய முன்றிலில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு திவ்விய ஜீவன மண்டபத்தில் வைக்கப்படும். பின்னர் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும். பல முக்கிய பிரமுகர்கள் அஞ்சலியுரைகளை நிகழ்த்துவார்கள். (ஐ-8)

## மட்டக்களப்பில் கைதானோரில் 9 பேரைக் காணோம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் படையினரால் கைது செய்யப்பட்ட 146 தமிழர்களில் 9 பேர் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 77 பேர் விடுவிக்கப்பட்டனர். 60 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி)


## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY (JCIT)
**VADDUKODDAI**

### Mechanical Craftsman Practice.

Lathe Machine (லேத் இயந்திரம்)
Shaping Machine (ஷேப்பிங் இயந்திரம்)
Welding (வெல்டிங்)
Fitting (பிற்றிங்)

ஆகிய துறைகளில் ஒரு வருடகால பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது. இத்துறையில் ஆர்வமுள்ள G.C.E. O/L வரை படித்த மாணவர்கள் பயிற்சி பெற்று சுயதொழில் ஆரம்பிக்கலாம்.

**மாணவர்களுக்கு**
- தமிழ் மொழி மூலமான வகுப்புகள்.
- விடுதி வசதி.
- நூலக வசதி.
- விளையாட்டுத்துறை வசதி.
- இலகு தவணைக்கட்டணம்.

விண்ணப்பப் படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**பயிற்சிநெறி ஆரம்பம்: ஜனவரி 9, 2002.**

தொடர்பு: Director,
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**
(C/19081)


# இரசாயனம் கலங்குதையா..!



மறைந்த எம் ஆசிரியர்

## ஆ.மகாதேவன்

அவர்களுக்கு
எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

வேதியலை விருப்புடன் நாம்
கற்க வைத்த வித்தகரே.
ஐயங்கள் தீர்த்து வைத்த
அறிவுடைமைக்கிகம் வணக்கும்
நல் இதயத் தோடிங்கு
நீர் விதைத்த விதைகளெலாம்
விருட்சமாகும் வேளையிலே
விண்ணகத்திற் தேகியதேன்?
கருணையும் சாந்தமும்
கண்ணுறங்கிப் போனதுவோ
கண் கலங்கித் தவிக்கின்றோம்
கனவு போல் தோன்றுதையா!
நிலையிலா வாழ்வு நீங்கி
நித்திய பெருவாழ்வு பெற்று
நிர்மலன் அடி இருக்க
நித்த(மு)ம் அரன் தாள் பணிவோம்!

2002 உயிரியல் பிரிவு மாணவர்கள்,
*நியூ சயன்ஸ் ஹோல்,*
(96665)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 03 - 1925



உதிர்வு 05 - 01 - 2000

திருமதி
## சிவபாக்கியம் சிற்றம்பலம்

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீரே! நீர்பிரிந்து*
*ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் உங்கள்*
*அருமை நினைவுகள் எம்நெஞ்சைவிட்டு ஒருபோதும் அகலாது!*
உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*முத்துமாரி அம்மன் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (96563)
- குடும்பத்தினர்.

# நேர்மை, துணிவு, தமிழ் உணர்வுக்கு நிலைக்களனாய் விளங்கிய குமார்

**'மாமனிதர்' குமார் பொன்னம்பலத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

*"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல்எனும் சொல்"*

என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து மறைந்தவர் குமார் பொன்னம்பலம் என்று சொன்னால் அது மிகையாகாது. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவராகவும், இலங்கையின் சிறந்த புகழ்பெற்ற வழக்கறிஞராகவும் விளங்கியபோதிலும் குமார் பொன்னம்பலம் ஒரு போதும் அரசியல் சூதாட்டங்களில் ஈடுபடவிரும்பாமல் வாழ்ந்தார்.

தமிழீழ மக்கள் வாழ்வா, சாவா எனப் போராடிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் நேர்மை, துணிவு, தமிழுணர்வு ஆகியவற்றின் நிலைக்களனாகத் திகழ்ந்து சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்துப் போராடியவர்.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போன்று சிங்களப் பேரினவாதத்தின் தலைமை குடிகொண்டிருக்கும் கொழும்பு நகரில் நெஞ்சுரத்துடன அவர் வாழ்ந்ததும், அச்சமின்றித் தமிழருக்காகப் போராடியதும் வீர வரலாறு ஆகும்.

"கொழும்பில் தான் பாதுகாப்புடன வாழ்வதற்கு சிங்கள அரசோ அல்லது சிங்கள இனத்தின் சகிப்புத் தன்மையோ காரணமல்ல. மற்றொரு 83 ஆம் ஆண்டு இனக் கலவரத்தைச் சந்திக்க சிங்கள அரசு திராணியின்றி இருப்பதுதான் உண்மையான காரணம்'' எனக் குமார் பொன்னம்பலம் வெளிப்படையாகப் பேசியும், எழுதியும் வந்தது கண்டு சிங்கள இனவெறியர்கள் ஆத்திரம் அடைந்தனர்.

தனது சட்ட நுணுக்க அறிவையும வாதத் திறமையையும் பயன்படுத்தித் தமிழர்களைக் காக்கும் பெரும் அரணாக நின்றார். இலங்கையின் உயர் நீதிமன்றங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக இடைவிடாது போராடினார். சிங்களப் பேரினவாத அரசின் அட்டூழியங்களை அச்சமின்றி அம்பலப்படுத்தினார்.

அவரைப் போன்று சட்ட அறிவும் வாதத்திறமையும் படைத்த ஆனால மேனா மினுக்கி மேல்தட்டு தமிழர்கள் பலர் பதவிகளுக்காகச் சோரம் போய் சிங்கள அரசியல்வாதிகளின் முன்னால மண்டியிட்டுக் கிடந்த காலகட்டத்தில் முற்றிலும் வேறுபட்டவராக விளங்கி தமிழ்த் தேசிய இனத்தின் காவலர்கள் விடுதலைப் புலிகளே என பதைப் பகிரங்கமாக அறிவித்த சான்றாண்மை அவருக்கு இருந்தது. உலக அரங்குகளில் தமிழீழ மக்களுக்காக வாதாடியவர் அவர். இலஙகைக்கும் பல்வேறு நாடுகளுக்கும் சென்று விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினார். இதன் காரணமாக அவர்மீது ஆத்திரம் கொண்டிருந்த சிங்களப் பேரினவாதிகள் அவரைப் படுகொலை செய்தனர்.



குமார் பொன்னம்பலம் அவர்களின உயிர்த் தியாகம் வீண்போகவில்லை. சுழன்று அடிக்கும் சண்டமாருதமாக உருவெடுத்து தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி ஒன்றுபடுத்தி அண்மையில் நடைபெற்ற தேர்தலில் சிங்களப் பேரினவாதிகளையும் அவர்களுடன் சோரம் போன துரோகிகளையும் தமிழீழ மண்ணில் வேரோடு சாய்த்தது.

1977ஆம் ஆண்டில் தமிழ் மக்கள ஒன்றுபட்டு நின்று தமிழீழமே தங்கள் குறிக்கோள் எனத் தீர்ப்பளித்தார்கள. அதற்குப் பிறகு 2001ஆம் ஆண்டில் மீண்டும் அந்தத் தீர்ப்பை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். என்ன நோக்கத்திற்காக குமார் பொன்னம்பலம் வாழ்நாள் முழுவதிலும் போராடினாரோ அந்த நோக்கம் வெற்றி என்னும் இலக்கை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

**பழ.நெடுமாறன்**

குமார் மறைந்துவிட்டாலும் அவரது குரல் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து ஒலிக்க வழியமைத்துவிட்டுத்தான் சென்றிருக்கிறார். அவருடன் இளம் புதல்வர் கஜேந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில வெற்றிவாகை சூடியுள்ளார்.

*"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்"* என்னும் குறளுக்கேற்ப தனது மகனை ஆக்கியுள்ளார் தந்தைவிட்டுச் சென்ற பணியை மகன் நிறைவேற்றுவாராக! ☆

# வீடுதான் சொர்க்கம்


இந்த வாரம் சோகமயமான சில சங்கதிகளைச் சொலலப்போகிறேன். எதற்கும் நீங்களும் தற்பாதுகாப்பாகக் கைவசம் ஒரு கைக்குட்டை வைத்திருப்பது நல்லது.

நம்மவர்களுக்கு மிகமிக அற்பமான ஓர் ஆசை இருப்பதுண்டு. தங்களுக்குக் கடைசி காலத்திலே கொள்ளி வைப்பதற்கு சாண்பிள்ளையானாலும் ஓர் ஆண்பிள்ளை பிறக்கவேண்டும் - இருக்கவேண்டும் எனபது! அது மட்டுமல்ல, தாங்கள் செத்தால் தங்களுக்காக அவர்கள் அழ வேண்டும் என்பதுவும்தான்! பிதிர் கடமைகளைப் பற்றிக் கூட அவர்கள் அவ்வளவாக அக்கறைப்படுவதில்லை. கொள்ளிதான் முக்கியம்...

ஆனால் நடப்பது என்ன? ஒன்றுக்குப் பல ஆண்கள் இருந்தாலும் அவர்களுக்குக் கொள்ளி வைப்பதற்கு ஆள்களைத் தேடவேண்டிய அவலம்.. பிள்ளைகள் எல்லோரும் புலம்பெயர்ந்த நாடுகளிலே - வரமுடியாத அல்லது வரவிரும்பாத நிலையிலே இருப்பார்கள்.

'யார் கொள்ளி வைப்பது' என்ற கேள்வி எழும்போது யாருமே இலேசில் முன்வரமாட்டார்கள். 'நான் கந்த சஷ்டி விரதகாரன் தெரியுந்தானே' என்பார் ஒருவர். 'நான் கோயில் தொண்டு செய்பவன், கோயிலுக்கு விளக்கு வைக்கவேணும்' என்பார் இன்னொருவர். இரண்டும் கெடடான் நிலையில் நின்று யோசித்துக்கொண் டிருப்பவரை இல்லக்கிழத்தி வந்து 'நீங்கள் பிறஷர்காரர் அல்லவா?' என்று இரகசியமாக இழுத்துச்சென்று விடுவாள்.

கடைசியாக ஒரு பரோபகாரி துணிந்து முன்வருவார். காரணம், இறுதிச்சடங்கு முழுவதையும் வீடியோவில் எடுத்து அனுப்பும்படி, அதற்கும் வேறாக உண்டியலில் பணம வந்து இருந்ததுதான்... (எவ்வளவு சோகம் பார்த தீர்களா? கைவசம் கைக்குட்டை இருக்கிறதுதானே...)



**அப்**பொழுது எங்களூர்ப் பாட்டி ஒருத்திக்குக் கடுமையான நோய் கண்டிருந்தது. நாட்டு வைத்தியரும் மூன்று நாள் 'கெடு' வைத்திருந்தார். கொழும்பிலுள்ள மகனுக்குத் தகவல தெரிவித்ததும் அவர் துணைவியாருடன் வந்துவிட்டார். மகனைக் கண்டதும் மகிழ்ச்சியில் போகவேண்டிய உயிர் ஆச்சிக்குத் திரும்பிவந்துவிட்டது. ஒருவாரமாகியும் ஒன்றும் நடக்காததினால் வந்தவர்களும் 'புறுபுறுத்துக்கொண்டு' திரும்பிவிட்டனர். இனிமேல் அப்படி அவசரப்பட்டு எதுவும் செய்துவிடாதீர்கள் என்ற உபதேசம் வேறு...

இரண்டு வாரம் கழித்து அந்த ஆச்சிக்கு மீண்டும் நினைவு தவறிவிடுகிறது. 'ஆவி அகத்ததோ புறத்ததோ' என்ற நிலைமையைக் கண்டு மீண்டும் கொழும்புக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கடந்த காலச் சம்பவத்தை நினைவூட்டித் தட்டிக்கழிக்க, நாம் 'இந்த முறை நிச்சயம்' எனபதை உறுதிப்படுத்திக் கொண்டிருநதோம். அவர்கள் 'நடக்காவிட்டால் என்ன செய்வது?' என வாதாடிக்கொண்டிருக்கையிலேயே எங்கள் எல்லாருககும் அடுத்த தகவல் வீட்டிலேயிருந்து கிடைக்கிறது 'நடந்துவிட்டதாக'... அவர்களும் தாம் அடுத்தநாள் காலை யாழ்தேவியில் புறப் பட்டு நண்பகல் அளவில் வந்து சேர்வதாகச் சொன்னார்கள். ஆச்சியின் பூதவுடலுக்கு மகன கொள்ளிவைக்கும் பேறும் கிடைத்தது.

கந்தரோடையில் நடந்த இன்னொரு சம்பவம்.. முதியவர் கவலைக்கிடமாக இருக்கிறார் என்ற தகவல் கொழும்பிலுள்ள மக்களுக்கு வேறுவிதமாகக் கிடைத்ததாம். அவர்களும் வானொலிக்கு 'மரணச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்' என்றவாறு அறிவித்தல்கள் கொடுத்துவிட்டு இங்கு வந்துவிட்டார்கள். வந்தவர்களுக்கு - எழுத்தாளர்கள் பாணியில் சொல்வதானால் 'தங்கள் கண்களை தங்களாலேயே நம்ப முடியவில்லை' முதியவர் தமது மரண அறிவித்தலை தாமே கேட்ட அதிசய மனிதராக வீற்றிருந்தார். அவர் தமக்கு அழுவதற்கும் ஆள்கள் இருக்கிறார்கள் கொள்ளி வைக்கவும் ஆள் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தியவராக மேலும் சில வாரங்கள் வாழ்ந்துவிட்டுத்தான் சிவபதமடைந்தார்.

இந்த இடத்திலே நண்பர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு தகவலும் நினைவுக்கு வருகிறது...

சிலருடைய மறைவைப் பற்றிக் குறிப்பிடுகையில் சிவபதமடைந்துவிட்டார், அமரத்துவம் எய்துவிட்டார், இறைபதம் சென்றுவிட்டார் என்றெல்லாம் ஆசை பற்றியோ அதீத நம்பிக்கையாலோ குறிப்பிடுவது உண்டு. அவர்களுக்கு அப்படியொரு தவப்பேறு கிடைத்தது பற்றி எமக்கு ஆட்சேபம் எதுவும் இல்லாவிட்டாலும், அப்படியானவர்களின் துயர்பகிர்வின்போது அதுபற்றித் துயரப்படுவதும் துயர் தெரிவிப்பதும் சரியாகுமா என்பதுவே எமது கேள்வி...

பொதுவாகக் காலமானவர்களுக்காக அப்படி வருந்தலாம் - அனுதாபப்படலாம் - துயரபடலாம். ஆனால் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து பேரின்பப் பேறு பெற்றவர்களுக்குமா அப்படி?

பாடசாலை வகுப்பு ஒன்றிலே சமய பாடம்நடந்துகொண்டிருந்தது. ஆசிரியர் சொர்க்கம் பற்றியும் நரகம் பற்றியும் பாடம் நடத்திவிட்டு மாணவர்களை நோக்கிச் சில கேள்விகள் கேட்கிறார்.

"உங்களில் சொர்க்கம் போக விரும்புபவர்கள் கைகளை உயர்த்துங்கள் பார்க்கலாம்' என்கிறார். பெரும பாலானவர்கள் கைகளை உயர்த்தினார்கள்.

அடுத்து "நரகம் போக விரும்புவோர் கைகளை உயர்த்துங்கள்" என்கிறார். 'தங்களுடைய சகாக்களை அங்குதான் சந்திக்கமுடியும்' என்பதாலோ என்னவோ அதற்கும் சிலர் கைகளை உயர்த்தினர்.

ஒருவன் மட்டும் ஒன்றுக்கும் கைதூக்காதது கண்ட ஆசிரியர் 'இவன் திரிசங்கு சொர்க்கம் போக விரும்புகிறான் போலும்' என்று நினைத்தவராய் "நீ எங்கு போகப்போகிறாய்?" என்கிறார்.

அதற்கு அந்த மாணவன் "எங்குமில்லை... பள்ளிக்கூடம் விட்டதும் எங்கும் போகாமல் நேராக வீட்டுக்கு வந்துவிடவேண்டும் என்பது அம்மாவின் கட்டளை" என்கிறான்.

- சனி அங்கிள் -

# 'கன்டோஸு'க்கு ஆசைப்பட்ட சிறுவன் சங்கிலியைப் பறிகொடுத்தான்

## யாழ். வைத்தியசாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காகத் தாயாருடன் வந்த சிறுவனை 'கன்டோஸ்' சொக்கலேட் வாங்கிக்கொடுத்து ஆசைகாட்டித் தனியாக அழைத்துச் சென்ற ஒருவர், சிறுவன் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தலைமறைவானார்.

கொடிகாமம், கச்சாய்ப் பகுதியில் இருந்து தோல் சம்பந்தமான வியாதிக்கு நேற்றுமுன்தினம் காலை சிகிச்சை பெறவந்த அமலதாஸ் கண்ணதாசன் (வயது 7) என்ற சிறுவனே தான் அணிந்திருந்த ஒரு பவுண் எடையுடைய தங்கச்சங்கிலியைப் பறிகொடுத்தான்.

வைத்தியசாலை வாசலருகே சிறுவனின் தாயார் மற்றொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்த போது அருகே நின்றிருந்த சிறுவனை அறிமுகமில்லாத ஒருவர் தனியே அழைத்ததாகவும் -

அவருடன் சென்ற சிறுவனுக்கு இரண்டு 'கன்டோஸ்' சொக்கலேட்டுகளை வாங்கிக் கொடுத்த அந்த நபர் சிறுவன் அணிந்திருந்த சங்கிலியை "அம்மா வாங்கிக் கொண்டு வரச்சொன்னார்" என்று கூறி அபகரித்துச் சென்றதாகவும் - கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ)

# கோழிகளுக்கான மருந்து வகைகள் யாழ்.குடாநாட்டில் தட்டுப்பாடு

யாழ்.குடாநாட்டில் கோழி வளர்ப்பவர்கள் கோழிகளுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் ஊட்டச்சத்து உணவு வகைகளுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுவதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாரிமழை காலத்தில் கோழிகளைப் பெருமளவில் பாதிக்கும் சளி நோய்க்குப் பயன்படுத்தும் "இனொக்சில்" உட்பட பல்வேறு மருந்து வகைகளுக்கும், முட்டை இடுவதை ஊக்குவிக்கும் "பிறீமிக்ஸ்" வகைகளுக்கும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கருவாட்டுத்தூள், உயிர்ச்சத்து மருந்துகளுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது. சில மருந்துப் பொருள்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் சிலவற்றை எந்த விலை கொடுத்தும் வாங்கமுடியாத அளவிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முட்டை விலை அதிகரித்துள்ள காலப்பகுதியில், கோழிகளை நோய்த்தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்குரிய முக்கியமான மருந்துகள் இல்லாத நிலை பண்ணையாளர்களை பெரியளவில் பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# நயினாதீவில் மீண்டும் பஸ்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.5

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நயினாதீவில் உள்ளக பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகவிகாரை ஊடாகச் செல்லும் பிரதான வீதி பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டதை அடுத்தே வ.பி.போ. சபை பஸ்சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலமும் மேற்படி வீதி கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தது தெரிந்ததே.

இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நயினாதீவு கடற்படை அதிகாரிகள் மற்றும் நாகவிகாரைக் குரு ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே மேற்படி வீதி மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி வீதியூடாக உள்ளக பஸ்சேவையை நடத்துவதற்கென வ.பி.போ. சபை கடந்த ஒரு வருடத்துக்கு முன்னரேயே புதிய பஸ் ஒன்றை அங்கு கொண்டு சென்றிருந்ததும் -

கடற்படையினரின் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்ட பஸ் கடற்படை முகாமில் தவம் கிடந்ததும் தெரிந்ததே. (க-7-117)

## கூட்டுறவாளர் கௌரவிப்பு

வலி.கிழக்கு,ஜன.5

வலி.கிழக்கு வடபகுதி அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 25 ஆண்டுகளாகப் பணியாற்றிய 29 பணியாளர்களைக் கௌரவித்துப் பணப்பரிசு வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த 29 பணியாளர்களையும் கௌரவித்து தலா 7 ஆயிரம் ரூபா பணத்தினை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.சண்முகநாதன் வழங்கவுள்ளார். (ஐ-180)

# சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.5

குடாநாட்டில் நுளம்பு, குடிதண்ணீர் ஆகியவற்றால் வேகமாகப் பரவிவரும் காய்ச்சலைத் தடுக்க பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைத் தவறாது கடைப்பிடிக்குமாறு சுகாதாரத் துறையினர் கேட்டுள்ளனர்.

குடாநாட்டு அரச மருத்துவமனைகள், தனியார் ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றின் வெளிநோயாளர் பிரிவுகளில் கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களே அதிகமாகச் சிகிச்சை பெற்று வருவதாகவும் -

எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை இந்தக் காய்ச்சல் தொற்று பரவும் அபாயம் உள்ளதாகவும் -

மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சுட்டாறிய நீரை குடிதண்ணீராகப் பயன்படுத்துதல், கிணறுகள், மலசல கூடங்கள் போன்றவற்றை சுத்தமாகப் பேணுதல், வீட்டுச் சுற்றாடல்களில் நீர் தேங்கும் குட்டைகளை இல்லாதொழித்தல் ஆகிய சுகாதார நடைமுறைகளை மேற்கொள்வதன் மூலம் பரவிவரும் காய்ச்சலை தடுக்கமுடியும் என்று சுகாதாரத் துறையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சமீப காலத்தில் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட 5 பேர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-180)

## ஒன்றுகூடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.5

இன்று சனிக்கிழமை நடைபெற விருந்த உள்ளூராட்சித் திணைக்கள யாழ்.பிராந்திய அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

# மட்டு. மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழை; பெரு வெள்ளம்!

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து அடைமழை பெய்து வருகிறது. தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வயல்கள் நீரால் மூழ்கியும் கால்நடைகள் இறந்தும் வீடுகள் நீரால் சூழ்ந்தும் மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியும் அவதிப்படுகின்றனர்.

ஏறாவூர்பற்றிலுள்ள சித்தாண்டி, விநாயகர்புரம், மாவடிவேம்பு, பேசும் கிராமம், பலாச்சோலை, ஐயங்கேணி, ஒருமுனைச்சேனை போன்ற தாழ்ந்த நிலப் பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த 2,500 குடும்பங்கள் வெள்ளத்தினால் அகதிகளாகியுள்ளன. இவர்களுக்கான நிவாரணங்கள் எதுவும் இதுவரையும் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசங்களில் வாழும் பெரும்பாலான குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றித் தற்காலிகக் குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் முறையான வடிகால் வசதிகளும் இல்லை.

(ஐ)


## விடியலுக்காய் குரல் கொடுத்த வீரதிலகம்



அமரர் மாமனிதர்

## குமார் பொன்னம்பலம்

தோற்றம்: 12- 08 - 1938

மறைவு: தாயகத்திற்காக 05 - 01 - 2000

சிங்கத்தின் குகைக்குள் நின்று தன் இனத்தின் விடியலுக்காய் உரக்கக் குரல்கொடுத்த மாமனிதன், ஆயுதம் எதுவுமின்றி துணிவே துணையாய் தலைநகரில் உலாவந்த தடித்த தமிழன், உரிமை மீறல் என்றபொழுது உதிரம் கொதித்தெழுந்து உலகெங்கும் அதனைப் பச்சை பச்சையாய் உரித்துக் காட்டிய தமிழன், முடியுமானால் அழித்துப்பார் என அரசுக்கு பகிரங்கமடல் எழுதிய தங்கத் தமிழன், இமியளவும் என் இனத்தை இழிவு செய்யவிடேன். அமிழ்தமான எம் தமிழை அழித்தொழிக்க முடியுமா? என்று சங்க நாதம் செய்தவன், தமிழர் மனங்களிலே மறையாய் வாழும் மறத்தமிழன் குமார் பொன்னம்பலம் அவர்களின் இரண்டாவது சிரார்த்த தினம் இன்றாகும். தன்மானத் தமிழனே! நீ மீண்டும் இந்த மண்ணில் பிறப்பாய். அப்பொழுது உனது கனவு நிஜமாகி விட்டதைக்கண்டு குதூகலிப்பாய். தமிழரின் குரலே, நீ இறக்கவில்லை. எங்கள் மனங்களில் வாழ்கின்றாய்.

(C/19030) ஆனைக்கோட்டை வாழ் மக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவஞானவதியார் அருணாசலம்

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சிவஞானவதியார் அருணாசலம் 30-12-2001 ஞாயிறன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (அராலி வடக்கு) கதிரேசு தம்பதிகளின் மகளும், நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், யோகராணி (புஷ்பம்), ஆனந்தநடேசன், விமலராணி, இந்திராணி, ஜெயராணி, அருமைநாதன், இராஜேந்திரன், செல்வராணி, பத்மராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தில்லைநடராஜன், சுகுணாம்பிகை, சண்முகதேவன், உமாபதிசிவம், கிருபானந்தி, சரோஜினிதேவி,பாலசிங்கம், குகராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கந்தசாமி (டிறிபேக் கல்லூரி ஆசிரியர்), காலஞ்சென்ற சிவகுருநாதர் (கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (கமத்தொழில் திணைக்களம்), சிவநேசம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06-01-2002) ஞாயிற்றுக்கிழமை காலை ஜெயரத்ன மலர்ச்சாலையில் (பொரளை) வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.தில்லைநடராஜன்

*13A,55ஆவது லேன்,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு.*
**T.P. : 500096**

(C/19031)

### V.K.நாகராஜா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட V.K.நாகராஜா (இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்) நேற்று முன்தினம் (03.01.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2002) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ.சிவராசா *(மருமகன்)*,
இ.அருந்தவராசா *(பேரமகன்)*.

*வாசிகசாலை தெற்கு,*
*உடுப்பிட்டி.*
*திருமதி நா.தங்கத்திரவியம்*
*(மனைவி)*
*நகதுரி,*
*யாழ். வீதி, வவுனியா.* **T.P.: 024 - 22699.**

(96684)

உ

சாமியே சரணம் ஐயப்பா!

## ஐயப்ப சுவாமியின் ஜெயந்தி தின விழா

கோண்டாவில் கிழக்கு சந்தி, இருபாலை வீதியில் அமைந்துள்ள சபரீசன் ஐயப்பன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஜெயந்தி தினத்தை முன்னிட்டு அபிஷேகம், பூசை, பஜனை, படிப் பூசை என்பன நடைபெறும். அடியார்கள் வந்து தரிசித்து ஐயப்பனின் அருளைப் பெறுவீர்களாக!

(96686) சாமி சரணம்! *- உபயகாரர்*

## கண்ணீர் அஞ்சலி

வலி. கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி

செல்வி கந்தையா இராஜேஸ்வரி

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கந்தையா சின்னம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர்கள்,
வலிகாமம் கிழக்கு.

(96687)

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழில்பயிற்சி நிறுவனங்கள்

**தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.**

**ஆரம்பம்: 09-01-2002**

I)
- A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
- B. DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
- C. DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
- D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
- E. DIPLOMA IN DESK-TOP PUBLISHING — DURATION 6 MONTHS
- F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. — DURATION 3 MONTHS
- G. DIPLOMA IN HARDWARE ENGINEERING — DURATION 1 YEAR

II) **CERTIFICATE COURSES:**

| | | |
|---|---|---|
| i) MS - WORD - 2000 | vi) PASCAL | xi) d BASE FOR WINDOWS |
| ii) MS - EXCEL - 2000 | vii) d BASE III + | xii) PRINT SHOP DELUXE |
| iii) MS - ACCESS - 2000 | viii) PAGE MAKER | xiii) ADOBE PHOTO SHOP |
| iv) MS - POWER POINT | ix) WINDOWS 95 | |
| v) VISUAL BASIC VER.6.5 | x) COREL DRAW | |

**இவற்றுடன் சிறுவர்களுக்கான பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.**

III) **1) YEAR 3 - YEAR 5**
**CHILDREN COMPUTER STUDIES - 1**
**CHILDREN GAMES - 1**

**2) YEARS 6 - 10**

*[மேற்படி வகுப்புகள் போதிய வசதிகளுடன் (தனிப்பட்ட வகுப்புகளும்) இடம்பெறுகின்றன. மேற்படி பயிற்சியை மேற்கொள்பவர்களுக்கு உசாத்துணை நூல்களும் (Reference Books) வழங்கப்படுகின்றன]*

| | | |
|---|---|---|
| IV) | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| V) | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| VI) | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & Diesal வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VII) | ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றீவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VIII) | வானொலி, தொலைக்காட்சி பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| IX) | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| X) | மின் ஒட்டுநர் பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| XI) | மரவேலை (With use of Machinery) | காலம் 6 மாதங்கள் |
| XII) | குளிர் சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

*(IX, X, XI பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயிற்சி நிறைவில் மீண்டும் சிறிய ஊக்குவிப்புப் பணம் வழங்கி, ஒரு வருடத்துக்குப் பயிற்சி வழங்கி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பெறுவதற்கு சிபார்சு செய்யப்படும்)*

**எமது நிறுவனத்தின் புதிய பிரிவுகள் 2002ஆம் ஆண்டில் ஆரம்பமாகின்றன என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

(1) கணனிகள் சம்பந்தமான சகல திருத்த வேலைகளும் எமது நிறுவனத்தில் நடைபெறுகின்றன.

(2) வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் பிரச்சினைகளும் திருத்தம் செய்துகொடுக்கப்படும்.

Note:- 1) பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்

2) வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக்குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

3) எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.

4) பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER....!**

**கட்டமைத்தலும், திருத்துதலும்**

சகலவிதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டுவேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஒடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்துகொடுக்கப்படும்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2002**

**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2002ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம் அத்துடன் மோட்டார் சைக்கிள்களுக்கான ENGINE No. பொறித்துக்கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:-

**REGISTRAR**
PATRICIAN INSTITUTE
59, ST.PATRICK'S ROAD, JAFFNA.

(C/19032)

# 13 வயது பாடசாலை அணிகளின் கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

யாழ். மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 13 வயதுக்கு உட்பட்ட மாணவர்களிடையே நடத்தி வரும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணிமுதல் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் புனித. பத்திரிசியார் கல்லூரியும் மோதுகின்றன. பிரதமவிருந்தினராக வர்த்தக வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.இரவீந்திரா கலந்துகொள்கிறார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் இதுவரை காலமும் 15, 17 வயதுப் பிரிவுகளுக்கு சுற்றுப் போட்டிகளை நடத்திவந்தது. வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் இந்தச் சுற்றுப் போட்டியில் சுற்றுக் கேடயங்களும் வழங்கப்பட்டுவருகின்றன. இந்தத் தடவை இச்சுற்றுப் போட்டிகளில் 14 பாடசாலைகள் பங்குபற்றின.

முதன்முறையாக கடந்த வருடம் 13 வயதுப் பிரிவுக்கு சுற்றுப் போட்டியை நடத்தியது. பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியில் பத்துப் பாடசாலைகள் கலந்துகொண்டன.

13 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்து புனித. பத்திரிசியார் கல்லூரியும் -

சென்.ஜோன்ஸ் கல்லூரியைத் தோற்கடித்து யாழ். மத்திய கல்லூரியும் -

இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன. ☆



யாழ்.மத்திய கல்லூரி அணி

இருப்பவர்கள் :- இடமிருந்து வலமாக வி.கே. சண்முகலிங்கம் (ஆலோசகர்), ஈ.எவ்.ஆர். ஜெயக்குமார் ( பொறுப்பாசிரியர்), லெப்டினன்ட் என்.நாகரத்தினம் (உப அதிபர்), ஆர். ஏபிரகாம் பிரசாத் (அணித் தலைவர்), கே.இராஜதுரை (அதிபர்), ஜே.டிலான் (அணியின் உதவித் தலைவர்), வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), எஸ்.தனேஸ்காந்தன் (பயிற்றுநர்)

நிற்பவர்கள் :- இடமிருந்து வலமாக - ரி.சம் ஸன், ஏ.தனுஜன், கே.நவநீத், எஸ்.சுதர்ஸன், பி.புஸ்கரன், ரி.விக்ஸன், ரி.துஷ்யந்தன், ஆர்.டானியல் நிதர்சன், கே.ரவிராஜ், எஸ்.ஜீவா அஸ்கனஸ், டி.அலன்சோ, ஏ.வாகீஸன், ஆர்.உதயகாந்த்,



புனித. பத்திரிசியார் கல்லூரி அணி

அமர்ந்திருப்பவர்கள் :- இடமிருந்து வலமாக - ஏ.எஸ்.நிஸாந்தன் (பயிற்றுநர்), வி.ஜே.லோர்ட்ஸன் (அணித் தலைவர்), வணபிதா எம்.ஜே.செல்வநாயகம் (உப அதிபர்), வி. விதுபாலா (அணியின் உதவித் தலைவர்), எஸ். சகாயராஜா (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள் :- முதல் வரிசை இடமிருந்து வலமாக - ஏ.ஜெயேந்திரன், எம்.ஜே.மனோஜ், ஜே.ஜீனத்ராஜ், ஐ.ஜக்சன், எஸ்.ஜனன்ராஜ் ஏ.எஸ். குகதாசன், எம்.நிரோஷ் ஆனந்த்.

நிற்பவர்கள்:- இரண்டாம் வரிசை - இடமிருந்து வலமாக - பி.பத்மமுரளி, எம்.மேரி ஜோய், ஜே.ஜதீஸ்வரன், எம்.எவ்.சில்வின், ஏ.மரின்குமார், ஆர்.கனிஸ்ரன்.

# 7 ஆயிரத்து 233 பிறப்புகள் கடந்த ஆண்டில் பதிவு

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 918 காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட பதிவகத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேஆண்டில் 7 ஆயிரத்து 233. பிறப்புப் பதிவுகளும், 2 ஆயிரத்து 680 விவாகப் பதிவுகளும், 2 ஆயிரத்து 286 இறப்புப் பதிவுகளும் 965 பெயர் மாற்றங்கள் மற்றும் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் 9 ஆயிரத்து 802 காணி உறுதிகள் பதிவுசெய்யப்பட்டன. 2 ஆயிரத்து 673 உறுதிகளின் பிரதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

65 ஆயிரத்து 938 விவாக, பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றுக்கான பிரதிகள் வழங்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை மூலம் தெரியவந்தது. (ஐ-10)

## விளையாட்டு நிகழ்வு

வலி.வடக்கு,ஜன.5

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிடையேயான வருடாந்த விளையாட்டு நிகழ்வில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை வை.எம்.ஏச்.எ. மைதானத்தில் கரபந்தாட்டப்போட்டி இடம்பெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பதினொரு 'விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன. (ஐ-86)

## முதல் முஸ்லிம் சபாநாயகரை கௌரவிக்க முத்திரை

முதல் முஸ்லிம் சபாநாயகரான மர்ஹூம் எச்.எஸ்.இஸ்மாயிலை கௌரவிக்கும் முகமாக ஞாபகார்தத் முத்திரை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் இதனைத் தெரிவித்தார்.

புத்தளம் தொகுதியிலுள்ள இஸ்மாயில்புரம் குடியேற்றக் கிராமத்தில் அண்மையில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அவர் உரையாற்றினார். ஏ.உ.நவாஸ் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

புத்தளம் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் எம்.ஐ.பீ.ஹாபி, புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்க பண்டார, வண்ணாத்திவில்லு பிரதேச சபை எதிரணித் தலைவர் கே. புத்ததாச ஆகியோரும் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர். (ஐ)

# சஞ்சீவி வாசகர் கருத்து

## தமிழ்மண்ணின் உணர்வுகளைத் தா?

மீண்டும் 'சஞ்சீவி'வார இதழ் வெளிவரவிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. எமக்குத் தற்பொழுது கிடைக்கும் வாரப்பத்திரிகைகள் யாவும் கொழும்பிலிருந்து வெளிவருபவையே. தமிழ் மண்ணின் உணர்வுகளை அப்படியே முழுமையாக வெளிக்கொணர அவற்றால் முடியாது.

சஞ்சீவி எமது மண்ணிலிருந்து பிறப்பதால் அதன் மூலமே மண்ணின் உணர்வுகளை முழுமையாகத்தரமுடியும். முன்பும் அவ்வாறே சஞ்சீவி தந்தது. கடந்த தேர்தலில் "உதயன்" ஆற்றிய பங்களிப்பும் இதற்கு ஒரு சான்றாகும்.

சினிமா நடிகர் - நடிகைகளின் கவர்ச்சிப் படங்கள், கிசு கிசு செய்திகள விற்பனையைப் பெருக்கும் என்று அந்த இதழ்கள் நம்புகின்றன. ஆனால் சஞ்சீவி அவ்வாறு தனது தரத்தைத் தாழ்த்திக் கொள்ளக்கூடாது. தமிழ் மக்களின் கலை, இலக்கியம், பண்பாடு என்பனவற்றைப் பேணிக் காப்பதுடன், வளர்ப்பதிலும் அது பெரும் பணியாற்றவேண்டும் என்பதே எமது விருப்பம்.

மக்களின் சுவை மாறுபடும் என்பதற்காக சென்றமுறை வந்த "கேள்வி - பதில்" பகுதி வரத்தான் வேண்டும் என்று எண்ணக்கூடாது. இந்தவிவகாரத்தில் வியாபார நோக்கம் இருக்கக்கூடாது. ஓர் உயர்வான மானுடப் பண்பை உண்டாக்குவதுடன், சீரிய சிந்தனையை மக்களிடத்தில் வளர்க்க சஞ்சீவி பாடுபடவேண்டும்.

எமது மாணவ சமுதாயத்திற்கு இன்று தேவை பொது அறிவே. தற்போது வரும் இதழ்களில் போதிய "பொது அறிவுச்" செய்திகள் வருவதில்லை. அதிலும் கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ளவர்களுக்கு பொதுஅறிவுக் கற்கைக்கென போதிய வசதிகள் உள்ளன. ஆனால் எமது பகுதி மாணவர்களுக்கு அத்தகைய வசதிகள் இல்லை என்றே கூறலாம்.

எனவே செய்திகளைப் பிரசுரிக்கும் பொழுது மாணவர்கள் பொது அறிவை வளர்த்துக்கொள்ளும் வகையில் அவற்றை வெளியிடவேண்டும்.

இவ்வாறே அறிவியல் - பொருளாதார வரலாற்றுச் செய்திகளை வெளியிடவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன். இதனையே பலரும் பெரிதும் வருவேற்பர் எனவும் கருதுகிறேன்.

மேலும் - ஒரு வேண்டுகோள்! தமிழ்மொழி தனியான செம்மையான மொழி. அதன் மரபு மாறாமல் - மீறாமல் - செய்திகளுக்குத் தலைப்புக் கொடுங்கள்.

**உரும்பிராய். சி.சிற்றம்பலம்.**

## "அதிரடி"யை மீண்டும் தொடங்கவும்

சஞ்சீவி வார இதழ் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வெளிவருவதையிட்டு பெரும்மகிழ்ச்சி அடைகின்றேன். எப்போது மீண்டும் சஞ்சீவி வருவான் என்று ஆவலுடன் இருக்கிறோம். மின்னலின் "அதிரடி அரங்கு" வாசித்து அனேக நாள்கள் ஆகிவிட்டன. அதிரடியை மீண்டும் தொடங்கவும்.

மேலும் - அரசியல் விமர்சனம், ஆன்மீகம், விஞ்ஞானம் கணனி முதலிய கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம். சினிமா தேவை இல்லை. அறிவுக்குத் தேவையான துணுக்குகள் போடலாம். சஞ்சீவி எப்போது வருவான் என்ற திகதியை உடன் வெளிப்படுத்துங்கள்.

**உடுப்பிட்டி. மயிலைநாதன்.**

## வித்துவாட்டி பதிலைத் தாருங்கள்!

வணக்கம். எங்கள் இதயம் கனிந்த "சஞ்சிகை"வார இதழ் மறுபடி வெளிவரப் போகின்றது என்ற செய்தி மிகவும் மகிழ்ச்சியைத்தந்தது.

ஒரு சனிக்கிழமை வெளிவந்தால் அடுத்த சனிக்கிழமை மட்டும் சஞ்சீவி எப்பொழுது வரும் என்ற பெரிய ஆவலை வாசகர்கள் மனதில் வளர்த்த பெருமை அதற்குத்தான் உண்டு.

முன்பு வெளிவந்த சகல அம்சங்களும் பிரசுரமாக வேண்டும். வித்துவான் பதில் ஒவ்வொரு வாரமும் பெரிய எதிர்பார்ப்போடு வரவேற்ற சில வேடதாரிகள், அப்பகுதி மிகவும் ஆபாசமானவை என்று எதிர்ப்பும் அவ்வப்போது தெரிவித்தனர்.

அவர்களுக்காக ஒரு மாறுதல் - 'வித்துவாட்டி' பதிலாக இப்பகுதியை ரசனைமிக்கதாய் அமைத்தால் என்ன?

இப்பொழுது இளமைப் பொலிவோடு சிறுகதை கவிதைகள் பெருமளவில் படைக்கப்படுகின்றன. அவர்கள் யாவரும் சஞ்சீவி மூலம் வளர வாய்ப்பளியுங்கள்.

விளையாட்டுப் பகுதியில் நிறைய புது அம்சங்களுக்கு இடம் ஒதுக்குங்கள்.

"உதயன்" - எப்பொழுது துணிச்சல் மிக்க பத்திரிகை என்று சிலாகிக்கப்பட்டு விருது பெற்றதோ அன்றே சஞ்சீவியும் அப்பெருமையில் இணைந்துகொண்டது.

சஞ்சீவி பூரண பொலிவுடன் வெளிவர எமது ஆசிகளும் வாழ்த்துக்களும்.

**கொக்குவில். து.வைத்திலிங்கம்.**

## தரமான திரைப்பட விமர்சனமும் தேவை

மீண்டும் "சஞ்சீவி" வெளிவ்ரவிருப்பதையிட்டு பெரும்மகிழ்ச்சி. அதனை வாழ்த்தி வரவேற்கும் இதயங்களோடு நானும் இணைந்து அன்புடன் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக கனதியான வாரப் பத்திரிகை ஏதும் வெளிவராத குறை நீங்கவிருக்கும் அதேபொழுதில், மிகுந்த கவனத்தோடு நல்ல பல விடயங்களை சஞ்சீவி தரவேண்டும் என எதிர்பார்கிறேன்.

சாதாரணமாக ஒரு வாராந்த ஏடு தரக்கூடிய விடயங்களோடு முன்னர் வெளிவந்த மௌன மொழி, கவிதைப் பக்கம் போன்றவையும், இலக்கியத் தரம் மிக்க சிறுகதைகள் மற்றும் போட்டிகள், நவீன சினிமா பற்றிய கண்ணோட்டங்கள், அத்துறை சார்ந்த தரமான ரசிகர்களின் அபிப்பிராயங்கள் என்பவற்றையும் இனிவரும் சஞ்சீவியில் பிரசுரிப்பீர்களாக.

இப்போது வீடியோ மூலம் நிறையப் படங்கள் வந்து குவியும் நிலையில், அவற்றால் விளையும் நன்மை - தீமை பற்றிய பார்வைப் பகிர்வையும் தரமான திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்களையும் சஞ்சீவியில் சேர்த்துக்கொள்ளலாம். தரக்குறைவான படங்கள் பற்றிய கண்டனங்களையும் கூடச் சேர்த்துக்கொள்வது ரசிகர்களை விழித்துக்கொள்ள வைக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

துறை சார் நிபுணர்களின் போட்டிகள்,
கல்வித்துறை - குறை - நிறைகள்,
மாணவர் பக்கம்

சிறுவர் பக்கம் என்பவற்றையும் சஞ்சீவில் புதுமை கூட்டித்தருவது விரும்பத்தக்கது.

"புதிய படைப்பாளிகள் அறிமுகம் என ஒரு பகுதி ஆரம்பித்தால் என்ன? ஓர் ஊக்குவிப்பு நடவடிக்கையாக அது அமையும் அல்லவா? அத்துடன் படைப்புக்களுக்குச் சன்மானம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதும் மேற்சொன்ன படைப்புக்களுக்கான செயல் முறையாக அமையமுடியும்.

பத்திரிகைப் படைப்புக்களுக்கென ஒரு தரத்தைப் பேணுவது அவசியமென்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

**நல்லூர். ந.சத்தியபாலன்.**

# பொதுக் கூட்டம்

**வசந்தகான சபா - காங்கேசன்துறை**

மேற்படி சபாவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை (2002-01-06) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும். எனவே, சபா சார்ந்த உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கோருகின்றோம்.

தலைவர்,
வசந்தகான சபா.

(96681)

# வடமராட்சி தொழில்சார் பொது அமைப்புக்களின் பேரவை

## பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி பேரவையின் பெயர், யாப்பு, வேலைத்திட்டம் ஆகியவற்றை ஆராய்ந்து அங்கீகரிப்பதுடன் நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறும். அனைத்து அரச, அரசசார்பற்ற மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இடம் :* சதா பொன்ஸ் கல்வி நிலையம்
மாலி சந்தி, அல்வாய்
*காலம் :* இன்று (05.01.2002) சனிக்கிழமை
மு.ப. 10.00 மணி

இடைக்கால நிர்வாக சபை
வடமராட்சி தொழில்சார் -
பொது அமைப்புக்களின் பேரவை.

(C/0001)

# பரீட்சை நிலைய மாற்றம்

வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 06.01.2002-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாண மாணவர்களுக்காக யா/இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவிருந்த சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்வரும் பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

1) யா/சைவப் பிரகாச வித்தியாசாலை - கந்தர்மடம்
2) யா/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை - கோயில் வீதி
3) யா/சாதனா பாடசாலை - முத்திரைச் சந்தையடி

சைவ சமய விவகாரக் குழு,
யாழ்.மாநகராட்சி மன்றம்.

(C/19044)

# யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

04.01.2002 பேக்கரி உரிமையாளரின் கலந்துரையாடலின் தீர்மானத்திற்கு இணங்க 450 கிராம் பாணின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 15.00 ஆகும்.

செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்படி பேக்கரியில் வைத்து மொத்த விற்பனை விலை ரூபா 14.00 ஆகும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

*குறிப்பு:-* நிறை, 450 கிராமுக்கு குறைவாக இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

*317, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/19045)

நிர்வாகம்,
யா.மா.பே.உ.ச.

# கண்ணீர் அஞ்சலி



**இரசாயனவியல் பேராசான்**

**ஆ.மகாதேவன்**

(B.Sc., Dip. in Edu., S.L.E.A.S.)

*இரசாயனவியல் அறிவால்*
*எம்மை வாழவைத்தவரே!*
*உரும்பிராயில் வாழ்ந்தாலும் -*
*எங்கள்*
*உள்ளங்களில் வாழ்பவரே!*
*கார்மழைபோல் கண்ணீரை*
*காணிக்கை ஆக்குகிறோம்.*

20ஆம் அணி,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(96723)

இமயத்தில் கலந்தவரிற்கு...

# இதயத்து அஞ்சலிகள்

## அமரர் ஆறுமுகம் மகாதேவன்

எதைச் செய்ய மறந்தீர் எங்களிற்கு?
எதைச் செய்துவிட்டோம் நாம் உங்களுக்கு?
பூக்கள் புன்னகைத்த போது
நினைக்கவில்லை உதிருமென்று
'ஏம் சொல்லுவது'
எங்கு சென்றீர் எம்மைவிட்டு?

உங்கள் ஆத்மசாந்தியை, வேண்டும்
**99 A/L விஞ்ஞானப்பிரிவு மாணவிகள், Beacon**

(96719)

## நகரில் இளைஞரை துரத்திப் பிடித்தனர் யாழ்.பொலீஸார்!

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ். நகரப் பகுதியில் வைத்து யாழ்.பொலீஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

கன்னாதிட்டிச் சந்தியில் இன்னுமொரு நபருடன் சைக்கிளில் சென்ற இளைஞரை ஜீப்பில் வந்த பொலீஸார் நிற்குமாறுகூற அவர் தப்பி ஓட முற்பட்டார் என்றும் -

அதை அடுத்து பொலீஸார் அவரைத் துரத்திப்பிடித்து அவர் கொண்டு வந்த சைக்கிளையும் ஜீப்பில் ஏற்றிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியைச சேர்ந்தவர் என்றும், சந்தேகநபரிடம் பெற்ற தகவல்களை அடுத்து மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (க-6-4-9)

## மாணவருக்கான கணனிப் பயிற்சி

யாழ்.மத்திய கல்லூரி மகேஸ்வரி கணனி வள நிலையம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கல்லூரிகளையும் சேர்ந்த ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறியையும் இவ்வாண்டுக்கான டிப்ளோமா கற்கை நெறியையும் ஆரம்பிக்கவிருக்கின்றது. இந்தக் கற்கை நெறிகளைப் பயில விரும்புபவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளர். (க-3)

## இன்று தேசிய துக்கதினம்

கடந்த செவ்வாயன்று மாரடைப்பால் காலமான போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சரும், ஐ.தே.கட்சியின் உப தலைவருமான காமினி அத்துக்கோறளையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்றையதினம் தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களில் இன்று தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படவேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

அமைச்சரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு இரத்தினபுரி நகரிலுள்ள சீவலி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (க-7)

## இன்றைய நிகழ்வுகள்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணிக்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் கலந்துகொண்டு மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 25 பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-6)

☆ ☆ ☆

நவாலி, ஆனைக்கோட்டை, குடத்தனை ஆகிய பகுதிகளின் பெண்கள் ஒன்றியங்களின் சமூக கலாசார மேம்பாட்டுப் பிரிவு நடத்தும் சிறுவர் கலைவிழா இன்று காலை 8.45 மணிக்கு நவாலி தென்னிந்தியத் திருச்சபையின் பெண்கள் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.ஜே.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-7-100)

☆ ☆ ☆

நல்லூர் சென்.ஜேம்ஸ் ஆலய வாலிபர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அகவொளி நிலைய இயக்குநர் அருட்தந்தை எஸ்.ஜே.இராஜநாயகம் "இளையோரின் செயற்பாடுகள் பற்றி ஒரு நோக்கு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

விவிலியத்தின் ஊடாக இளையோரின் செயற்பாடுகள் என்ற கருப்பொருளில் அருள்திரு.ஸ்ரீபன் அருளம்பலம கருத்துரையாற்றுவார். (ஐ-6)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
19
-
10
-
1947



உதிர்வு
02
-
01
-
2002

எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய இரசாயனவியல் ஆசான்

## ஆறுமுகம் மகாதேவன்

கலாசாலை வாழ்வுதனில்
கரையேறும் வேளைதனில்
காலனவன் கொடிய நோய்வடிவில்
உம்மை எம்மிடம் இருந்து பிரித்தானோ?

எம் நெஞ்சங்களில் நிறைந்துவிட்ட
ஆசானுக்குக் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக!*

விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர்கள்,
2ஆம் வருடம், பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

(96712)

# இதய அஞ்சலி

மலர்வு
19
-
10
-
1947



உதிர்வு
02
-
01
-
2002

## ஆறுமுகம் மகாதேவன்

(B.Sc., Dip. in Ed., S.L.E.A.S.)

நிமிர்ந்த நடையும் நேரிய உள்ளமும்
கனிந்த செந்தமிழ் வார்த்தைகளும்
சிதறித்தான் போயிற்றோ - நீங்கள்
பிரிந்து சென்றதால்
பெருந்துயர் கொண்டு நாம்
பதறித்தவிப்பதுதான் உண்மையாயிற்றோ?

எமது இரசாயனவியல் பேராசானிற்கு
எம் இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

1999/2000 விஞ்ஞானப் பிரிவு,
ஆசிரிய மாணவர்கள்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(96718)

# கண்ணீர்ப்பூக்கள்



எங்கள் பேராசான்

**அமரர் ஆறுமுகம் மகாதேவன்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரிற்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

விரிவுரையாளர்கள்,
மாணவர்கள், விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(96714)

# இதய அஞ்சலி

**இரசாயனவியல் ஆசிரியர்**
**அமரர் ஆ.மகாதேவன் அவர்களுக்கு**

வாழவைக்கும் நினைவுகளுடன்
உங்கள் வகுப்பறை நினைவுகளும்!
ஆனால் நீங்கள் மட்டும்
எங்களுடன் நிலைக்க மறுத்து விட்டு...

நீங்கள் உங்களுக்காகக் கற்பிக்கவில்லை
மாறாக எமக்காக, எல்லாம் எமக்காக!
தங்கள் சேவை மேலும் தொடர
ஏனோ மரணத்திற்கு மட்டும் மனம் வலித்ததோ?

உண்மையில் மரணம் தோற்றுப் போனது
எம்மிடமிருந்து உங்களைப் பிரிக்க முயன்று! ஏனெனில்
உங்கள் இரசாயனவியல் சிந்தனையையே
எம்மிடம் விதைத்த நீங்கள்
எம்மை விட்டு அகல இயலுமா?

ஆம், நீங்கள் என்றும் எம்முடன்
எப்போதும் இருந்தது போல...
அதே புன்னகையுடன்...
இனி மரணம் உங்களுக்கு என்றுமில்லை!

*தங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,*
**மாணவர்கள், (பேராதனை பல்கலைக்கழகம்)**

(C/19039)

## தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கலந்துரையாடல்

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

காலம்:- நாளை (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி

முக்கிய குறிப்பு:- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு.நடராஜா இரவிராஜ்** அவர்கள் கலந்துகொள்வார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தொகுதிக் கிளைகளின் உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*57/48, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (96710)

சூ.சே.குலநாயகம்
அழைப்பாளர்.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

### தொலை நிலைக் கல்வி இயக்கம்

மாணவர் அனுமதி



விண்ணப்ப முடிவு திகதி: 31-01-2002

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன. உங்களின் அடுத்த திட்டம் என்ன?

காலம் பொன்னானது அல்லவா!

இன்றே இப்பல்கலைக்கழகம் மூலம் ஒரு பட்டதாரி ஆகுங்கள்.

காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு துறைசார்ந்த பட்டப்படிப்புக்கள், மேற்படிப்புக்கள், டிப்ளோமா போன்ற 40 பாடநெறிகள் உண்டு.

*2002 ஆம் ஆண்டுக்கான நேரடி அனுமதிகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும்:-*

**அம்பிகா உயர் கல்வி நிலையம்**

46, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.
தொலைபேசி: 331722 தொலைநகல் 433060
Hotline 077-322614

யாழ்ப்பாணத்தில் தொடர்பு:

**திரு.ஜெகநாதன் தற்பரன்**

பட்டப்படிப்புக் கல்லூரி,
57/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்.

(C/19038)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 - 03 - 1918



மறைவு 06 - 12 - 2001

### திருமதி செல்லம்மா பரநிருபசிங்கம்

(புங்குடுதீவு-1)

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

இன்று (05-01-2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ப.தனபாலசிங்கம்,*
*27, சீனியர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (96720)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### வாரபலன் நாளையே வரும்

வழமையாக சனிக்கிழமைகளில் வெளிவரும் சோதிட வார பலன் இவ்வாரம் மட்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிரசுரமாகும்.

### சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,ஜன.5

திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை காலை 8மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, எஸ்.சதாசிவம் ஆகியோர் முற்றோதலை நிகழ்த்துவர். காலை 7மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும்.(க-7)

### உதைபந்தாட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளைய போட்டியில் பலாலி ஆசிரியர் கலாசாலை அணியை எதிர்த்து கரவெட்டி கல்விக் கோட்ட அணி மோதும். (க-7)

### உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கருத்தரங்கு

யாழ்உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரில் நடைபெறும்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தப்படவுள்ள பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அனைவரையும் இக்கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-8)


**N.E.I.**

பருத்தித்துறை வீதி, நல்லூர்.
2003 A/L
2004 A/L
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்: 05-01-2002
மாலை 3.30 (O.T.)
தரம் 3 முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
விஞ்ஞானம்
இரா.செல்வவடிவேல்
(C/19042)

**ராஜா** யாழ்ப்பாணம்
ஷியாம், சிம்ரன், ஜோதிகா நடித்த
**12 B**
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C/20092)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
கமல் (இரட்டை வேடம்),
மனிஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

**லஷ்மி** இணுவில்
13 வரை
அஜித், தபு, மம்முட்டி
**கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்**
தினசரி: 10.30, 2.30 (பு.நே.)

**நாகம்ஸ்** கன்னாகம்
அஜித், பார்த்திபன், தேவயானி நடித்த
**நீ வருவாய் என**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00


## அமரர் ஆ.மகாதேவன் நினைவஞ்சலி நிகழ்வு



இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: இன்று (05-01-2002) சனி பிற்பகல் 1.30 மணி

நிகழ்வுகள்:-
- ★ மலரஞ்சலி
- ★ ஆத்மசாந்திக்கான இறைவழிபாடு
- ★ கவிதாஞ்சலிகள்
- ★ அஞ்சலியுரைகள்

அமரரின் அன்புள்ளங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(96705) - ஏற்பாட்டுக் குழுவினர்.

## இவரைக் காணவில்லை



இப்படத்தில் காணப்படுகின்ற - அல்வாய் வடமேற்கில் வசித்து வந்த - 90 வயதுடைய **சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை** என்பவரை 02.01.2002இல் இருந்து காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தால் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தருமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

*மாறம்புலம்,*
*அல்வாய் வடமேற்கு,*
*அல்வாய்.* (96698)

தேடுபவர்:
க.செல்லப்பாக்கியம்.

## மணிக்குரல் மணிவதனன் ஜெயச்சித்திரா

### 7ஆம் ஆண்டு ஞாபகார்த்த கலைப்போட்டிகள் ஆரம்பம்

நிஷாந்தா ஜுவலறி ஆதரவில்

- ✱ பாட்டுக்குப்பாட்டு மற்றும்
- ✱ தேன்இசைமழை (பாட்டொன்று பாடல்)
- ✱ டிஸ்கோ டான்ஸ் (தனிநபர் நடனப்போட்டி)

பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் வழமைபோல் கடிதமூலம் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

மணிவீடியோ V.S.சற்குணன்
52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி - 16.01.2002

விளம்பர அனுசரணை: நகை உலகில் ஒரு வைர ஒளி

**நிஷாந்தா ஜுவலறி**

(C/19043) 75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## துயர்பகிர்வு நிகழ்வு அழைப்பு



அமரர்

### வே.சுந்தரதாஸ்

(முன்னாள் அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

*காலம்* : 05.01.2002 சனிக்கிழமை
*நேரம்*: பி.ப. 3.30 மணி
*இடம்* : மெமோறியல் அழகரட்னம் மண்டபம்

தலைவர் : திரு. இரா.வசந்தசேனன் *(சட்டத்தரணி)*

உறவினர்கள், நண்பர்கள், பழையமாணவர்கள், அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(96175)

அ.மு.அருணாசலம் *(அதிபர்)*,
*மெமோறியல் குடும்பம் சார்பாக.*

## மரண அறிவித்தல்

அருட்சகோதரி

### மேரி வுளோறா வல்லிபுரம் (தி.கு.சபை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப துறவறச்சபையைச் சேர்ந்தவரும் பம்பலப்பிட்டி சென்ற்பீற்றர்ஸ் கல்லூரி ஆசிரியையுமான அருட்சகோதரி மேரி வுளோறா 03.01.2002 வியாழக கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் 58, லொறிஸ் வீதி, பம்பலப்பிட்டியிலுள்ள திருக்குடும்ப இல்லத்தில் இன்று (05.01.2002) சனிக்கிழமை காலை 11.30 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்படும். பின்னர் சென்ற். பீற்றாஸ் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3.00 மணிக்கு நடைபெறும் திருப்பலியின் பின்னர் ஜாவத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (05.01.2002) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடச் சிற்றாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*மாகாணத் தலைவி,*
*மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
சகோதரி அன்சில்லா. (96713)

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை.**

**மலகூடக் கழிவுகள் மற்றும் கழிவு வாய்க்கால்களிலுள்ள கழிவுகளை இயந்திர சாதனங்கள் மூலம் அகற்றி அழித்தல்**

சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் இயங்கும் பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலையில் மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 23.01.2002ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிக்கப்படாத விண்ணப்பப் பணமாக 25 ரூபாவும் மீளளிப்புடனான கேள்விக்கட்டுப் பணமாக 1,000 ரூபாவும் செலுத்தி, 07.01.2002 முதல் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் 22.01.2002 பிற்பகல் 3.30 மணிவரை வழங்கப்படும். இக்கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயந்திரம் மூலம் கழிவகற்றல்" எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம். சித்திபெறும் கேள்விக்காரர் வருடாந்த ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தைப் பிணைப்பணமாக காசாகவோ, வங்கி உத்தரவாத முறியாகவோ சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன் அவ்வேலையைத் திருப்திகரமான முறையில் உடன் ஆரம்பித்து மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

**வைத்தியகலாநிதி உ.சிவபாதசுந்தரம்,**
**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள்,**
**யாழ்ப்பாணம்.**

*இல.8/1, கற்பகவிநாயகர் ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (C/19040)

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை தங்கவேல்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த K.A.T. உரிமையாளர் ஆசைப்பிள்ளை தங்கவேல் 03.01.2002 வியாழன் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசியர் ஆசைப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் சபாநாதன், யோகநாதன், அருள்நாதன், கீதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநிறைச் செல்வியின் அன்புக் கணவரும் சிவராசா, நாகராசா, தேவராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.01.2002 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முளக்கன் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
*அச்சுவேலி தெற்கு.* (96707) இ.கிருஷ்ணன் *(மைத்துனர்)*

## ஜனாதிபதிக்கு ஆலோசகராக கதிர்காமர்

கொழும்பு,ஜன.5

ஜனாதிபதியின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான ஆலோசகராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-10)

## சிறுவர் கலைவிழா

சங்கானை,ஜன.5

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் சிறார்களுக்கான கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சங்கத்தின் தலைவி செல்வி நா. நிரஞ்சனா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந் தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, வலி.மேற்குப் பிரதேச சபை உப தலைவர் வே.மகேந்திரன், பிரதேச செயலர் செ.இரத்தினம் ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாக சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவசோதி ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-29)

## வருடாந்த ஒன்று கூடல்

கோப்பாய்,ஜன.5

கோப்பாய்ப் பிரதேச செயலக வருடாந்த ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் செயலக பொது மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஐ-72)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஜன.5

நல்லூர் பிரதேச செயலக வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-86)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணக மலர்வு 10 - 06 - 1940



விண்ணக மலர்வு 06 - 12 - 2001

### அமரர் சின்னையா கனகசபை

*(பிரபல வர்த்தகர்)*

**அன்பும் பண்பும் கொண்டு வாழ்ந்தீர்!**
**உமது பிரிவு தாங்கமுடியவில்லையே!**
*ஆத்மா சாந்தி அடைக.*
ஓம் சாந்தி!

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
T.P.:070-212270 (96706) - குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### ஆறுமுகம் மகாதேவன்

*(குரும்பசிட்டி)*

**உன் உறவில் சங்கமித்த**
**கிராமத்து உடன் பிறப்புக்கள்**
**சொரியும் கண்ணீர்ப் பூக்கள்.**

குரும்பசிட்டி
☆கிராம அபிவிருத்திச் சங்கம் ☆வளர்மதி சனசமூக நிலையம்
☆மாதர் அபிவிருத்திச் சங்கம்☆ நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்


(96666)

## இரசாயனவியல் பேராசான் அமரர் ஆ.மகாதேவன் அவர்களுக்கு

# எமது இதய அஞ்சலிகள்

### இமயத்தைத்தானடைந்தார் எங்கள் மகாதேவன்!!

*வட்டமதி யன்னதிரு வதனமதன் நெற்றியினில்*
*பட்டையென நீறதனில் பகலவனின் ஒளியனைய*
*இட்டமுடன் செந்திலகம், இன்புறவே புன்னகையும்*
*தொட்டுமனம் பேசிவிடும் தொய்வில்லாப் பேச்சழகும்*
*திட்டமுற ஆற்றிவிடும் தெளிவுமிகு பணியழகும்....*
*பட்டதடா! விதியதனின் பணிமுடித்து விட்டதடா!*
*நட்டநடு வெளியதிலே நாமலறி நாவறள*
*விட்டுவிட்டுப் போய்விட்டார் - விக்கியழ வைத்துவிட்டார்!*
*கணிதமலை ஒன்றன்று கண்ணிமைக்கச் சாய்கையிலே*
*காட்டாற்று வெள்ளமெனக் கரைபுரண்ட சோகமதில்*
*நீரெழுந்து நின்றீர் நெஞ்சதனை இரும்பாக்கி - "வெக்டர்"*
*பேர் விளங்க வைத்தீர், பெரும்பொறுப்பு தான்சுமந்தீர்!*
*இன்றோ... தூள்கிளம்ப இமயமது துண்டு துண்டானதுபோல்*
*நீருடைந்து போனீரோ? நின்றிங்கேசெய்வோர் யார்?!*
*விழிசொரிய நெஞ்சுருகி விதிர்விதிர்த்து அழுதரற்றின்....*
*கழிந்திடுமோ ஐயா உம் காலமது முடிந்தகதை!*
*நேர்மைக்கு இலக்கணமாய் நியாயத்தின் வரைவிலக்கணமாய்*
*ஓர்மத்தின் உதாரணமாய் ஓம்புதலின் ஒளிவிளக்காய்*
*தீந்தமிழில் நாவலனாய் தெளிவுடனே ஆங்கிலத்தில்*
*தேர்ந்தெடுத்த ஞானமதால் தொலைவானம் தானெந்தன்*
*ஆய்ந்தெடுத்த இரசாயனத்தின் ஆற்றலுறு எல்லையென....*
*நாம் நம்ப மாட்டோமெம் நாயகனின் முடிவதனை!*
*தேம்பியழத்தான் முடியும், தெரியலையே ஆறும்வழி!!*



*முக்கிய குறிப்பு:-* இன்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ள நினைவஞ்சலி நிகழ்வுக்கு வருகைதந்து அமரரின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கான பிரார்த்தனையிலும் பங்குபற்றும்படி, எமது அன்புக்குரிய அனைத்து மாணவர்களையும், பெற்றோர்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.

**NEW SCIENCE HALL, NEW SCIENCE COLLEGE.**

நிர்வாகி, ஆசிரியர்கள்,
கல்வித்துறைசாரா உத்தியோகத்தர்கள்.

(96709)

# மிதிவெடிகள் வெடித்துச் சிதறி இரு விவசாயிகள் நேற்று காயம்

குடாநாட்டில் நேற்று இருவேறு இடங்களில் விவசாய செய்கைக்காகத் தோட்டங்களைத் துப்புரவு செய்த விவசாயிகள் இருவர் மிதிவெடிகளில் சிக்கி படுகாயமடைந்தனர்.

புத்தூர், ஆவரங்கால் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ காவலரணுக்கு அருகில் இருந்த தோட்டக் காணியைக் கொத்திப் பதப்படுத்திக் கொண்டிருந்த சமயம் மண்வெட்டி மிதிவெடியில் பட்டு வெடித்துச் சிதறியதில் அதே இடத்தைச் சேர்ந்த வைரமுத்து சிவசுப்பிரமணியம்(வயது-42) என்ற குடும்பஸ்தர் இடது கண் பார்வையை இழந்ததுடன் உடலில் சிறு காயங்களுக்கும் இலக்கானார்.

நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள தனது மிளகாய்த் தோட்டத்தில் புல் பிடுங்கிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரின், புல்பிடுங்கி மிதிவெடியில் குத்தியதால் அந்த மிதிவெடி வெடித்துச் சிதறியது.

நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான வி.ஜெயந்தன் (வயது-28) என்ற குடும்பஸ்தர் தனது இரு கைகளின் விரல்களிலும் கண்ணிலும் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் இடம்பெற்ற முதலாவது மிதிவெடிச் சம்பவங்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. (க-6-15)

# தென்மராட்சி ஆலயங்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

தென்மராட்சி,ஜன.5

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்கள் ஆகியவற்றின் விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும், அவற்றின் தேவைகளை அறிந்துகொள்ளுமபொருட்டும் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை இந்த வணக்கத்தலங்களின் பரிபாலன சபைகளின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது தர்மகர்த்தா ஆகியோரை எதிர்வரும் 7ஆம்,9ஆம் திகதிகளில் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதி இணுவிலில உள்ள பிரதேச செயலகத்திலும், 9ஆம் திகதி நெல்லியடியில் இயங்கும் பிரதேச செயலக அலுவலகத்திலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# மேலும் 56 பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்கல்வி வலயத்தில் எதிர்வரும 8 ஆம்திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து மேலும் 56 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களது பெயர் விவரங்கள் நேற்று வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி பின்னர் அழைக்கப்பட்டுள்ள 56 பேரும் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும் நேர்முகப்பரீட்சையில் யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நேர்முகப்பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறும், இவர்களுக்கு அழைப்புக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா தெரிவித்துள்ளார். (ஐ-8)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன முன்னாள் இரசாயனவியல் ஆசிரியர்

### ஆ.மகாதேவன்

அவர்கள் காலமானதையிட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிரு ரியூசன் கல்வி சமூகம்,
கோண்டாவில்.

(96721)

## கண்ணீர் அஞ்சலி

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில்
தொண்டராசிரியராகக் கடமையாற்றிய திருமதி நி.கோமதி,
தொண்டராசிரியராகக் கடமையாற்றும் செல்வி இ.பாமதி
ஆகியோரின் தந்தையாராகிய

### அமரர் க.இராமச்சந்திரன்

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.

(96717)

## மரண அறிவித்தல்

### திருமதி காசிநாதர் பரமேஸ்வரி

மூளாயைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட காசிநாதர் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (03.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலத்தின் அருமை மகளும், காலஞ்சென்ற காசிநாதரின் அன்பு மனைவியும், பரநிருபசிங்கம் (வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற பூபாலசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும் அழகேஸ்வரி, புவனேஸ்வரி (முன்னாள் லிகிதர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அழகரத்தினத்தின் சிறிய தாயாரும், சண்முகராஜா (ஓய்வுபெற்ற சுகாதார உதவியாளர்), யோகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவாஜினி (கனடா), சிவசிறி (இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு), சிவஅருள் (லண்டன்), சிவஅருட்செல்வி (மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), சசிகரன் (கனடா), கஜானன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் தக்ஷனின் பூட்டியும் ஆவார்.

அன்னாருடைய இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (06.01.2002) காலை 10 மணிக்கு அன்னாருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*வல்லை வீதி,*
*சங்கானை.*

தகவல்:
சி.சண்முகராஜா (மருமகன்)


# உடுவிலில் நாளை மகரஜோதி விழா

யாழ்ப்பாணம்,ஜன.5

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் மகர ஜோதிப்பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு உடுவில் லவ் லேனிலுள்ள பஜனை நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

'தர்மசாஸ்தா' குருகுல முதல்வர் பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் தலைமையில் ஐயப்பசுவாமிக்கு திருவிளக்குப் பூஜை நடைபெறும்.

சிறப்பு நிகழ்வுகளாக 'ஐயப்பன் பெருமை' என்ற தலைப்பிலான வில்லுப்பாட்டு, 'ஐயப்பன் அவதார மகிமை' என்ற நாடகம், பஜனை என்பன இடம்பெறவுள்ளன. (க-4)

## நெடுந்தீவில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வுகள்

நெடுந்தீவு,ஜன.5

நெடுந்தீவு மத்தி மணற்கிணற்றடிப் பகுதியில் சட்டவிரோதமாக மண அள்ளும் நடவடிக்கை தொடர்கிறது.

இதனால் மேற்படி பகுதியில் உள்ள நன்னீர்க் கிணறுகள் உவர் நீர்க்கிணறுகளாக மாறத் தொடங்கி விட்டன என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்.அரச அதிபரால் மண் அள்ளுவதற்குத் தடை விதிக்கப்பட்ட இந்தப் பகுதியில் மண் அள்ளுவது தொடர்ந்தால் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகுந்து பெரும் கெடுதிகள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## நெடுந்தீவுக்கு மின் விநியோகம் ஒருமாதம் இல்லை

நெடுந்தீவு,ஜன.5

நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகம் கூடந்த ஒரு மாதமாகத் தடைப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபை மூலம் நெடுந்தீவு கிழக்கு, மத்தி பகுதிகளுக்கு வழங்கப்பட்ட மின் விநியோகம் இவ்வாறு தடைப்பட்டுள்ளது.

இதேவேளை -

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின் விநியோகத்துக்கென கொண்டு செல்லப்பட்ட ஜெனரேற்றர் ஒன்று கடந்த ஒரு வருடகாலமாக இயக்கப்படாது அப்படியேகிடக்கிறது. (க)

## நாளைய தினம் நடப்பவை

யாழ்ப்பாணம்,ஜன.5

புத்தாண்டை வரவேற்கும் முகமாக சர்வமத ஒற்றுமையை வெளிக்காட்டும் வகையில் நல்லூர் றோட்டரக்ட் கழகத்தினர் ஒளிவிழாவை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரியில் கொண்டாடவிருக்கின்றனர். (3)

✪ ✪ ✪

புன்னாலைக்கட்டுவன் புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அந்தோனியார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பிலிப் பிறேமதாசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் உடுவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் பிரதம விருந்தினராகவும், அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ், இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை உதவி முகாமையாளர் கே.சிவபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-7-133)

✪ ✪ ✪

வடமராட்சிப் பிரதேச சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10.30 மணிக்கு மந்திகை மடத்தடியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (க-7-109)

✪ ✪ ✪

"புதுமைலோலன் சிறுகதைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு யாழ். ஆரியகுளத்தில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. (க-7)

✪ ✪ ✪

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்படவட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் "ஆதாமிண்ட வாரியெல்லு" (மலையாளம்) என்ற திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புலியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-7)

# வாசகர் திருமுகம்

## கொற்றாவத்தையில் கசிப்பு உற்பத்தியா? தவறான தகவலை நம்பாதீர்கள்!

24.12.2001ஆம் திகதிய உதயனின் 'வாசகர் திருமுகத்தில்', "வழிப்படுத்தவேண்டியவர்களே இப்படி நடந்தால்" என்ற தலைப்பில் கொற்றை மண்பற்றாளன் எழுதிய விடயமானது உண்மைக்குப் புறம்பானதும், வேண்டும் என்றே கிராமத்திற்கு மாசு கற்பிக்கும் நோக்குடன் எழுதப்பட்ட விடயமுமாகும்.

கொற்றாவத்தை என்ற கிராமம் மிகப் பரந்தது. இக்கிராமத்தில் நான்கு சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன. வரலாற்றுச் சாதனை படைத்த எத்தனையோ வீரர்களை மண்ணுக்காக ஈய்ந்து, கல்லறைகளும் காவியம் படைத்த துயிலும் இல்லத்தினைக் கொண்டது இந்தக் கிராமம்.

கொற்றாவத்தை என்ற இக்கிராமம், கிராம அலுவலரின் செயற்பாட்டிற்காக கரணவாய் வடக்கு, கரணவாய் வடமேற்கு, அல்வாய் மேற்கு, கொற்றாவத்தை, கொற்றையூர், இமையாணன் வடக்கு, பொலிகண்டி தெற்கு என்றவாறு பிரிக்கப்பட்டுள்ளது. எனவே கொற்றாவத்தை என்ற கிராமத்திற்கு அப்பால் எங்கோ ஓர் இடத்தில் நடைபெறும் கசிப்பு உற்பத்தியை கொற்றாவத்தையின் எந்த மக்களும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

கசிப்பு உற்பத்தி - கசிப்பு விற்பனை தொடர்பாகக் கைது, வேட்டை போன்ற எத்தனையோ செய்திகள் "உதயனில்" பிரசுரமான வேளையிலும் கொற்றாவத்தையில் நடந்ததாக எந்த வேளையிலும் பிரசுரமாகவில்லை. இதற்கு இந்தப் பகுதி மதுவரி அதிகாரிகளும் சான்று கூறுவார்கள்.

எனவே உண்மைக்குப் புறம்பாக எழுதப்பட்டு பிரசுரமான தகவலின் உண்மை நிலையை சம்பந்தப்பட்ட ஒரு குழு வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*கொற்றாவத்தை.*

தி.அலைசேர்.
(கொற்றை மைந்தன்)

## கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரமா?

28.12.2001ஆம் திகதிய உதயனில் "குடியகல்வு விதிகளை மீறியோருக்கு பொதுமன்னிப்பு வழங்குங்கள் - பிரதமரிடம் டக்ளஸ் வேண்டுகோள்" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் "குடியகல்வு, குடிவரவு மற்றும் கடவுச்சீட்டுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுக்களின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரை டக்ளஸ் தேவானந்தா கேட்டிருக்கிறார்" எனப் பிரசுரமாகியிருந்தது.

கடந்த ஒருவருட காலமாக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகார அமைச்சராக இருந்தார் - அமைச்சரவை அந்தஸ்துடன். அந்த ஒரு வருட காலப்பகுதியில் இத்தகைய ஒரு நல்லெண்ணம் அமைச்சரின் மனதில் உதித்திருக்குமேயானால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால் டக்ளஸ் தேவனந்தாவோ, அதிகாரம் கையில் இருக்கும் போது தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படும் அநீதிகளுக்கு துணைபோய்க்கொண்டு, தமிழ் இளைஞர்களின் அநாவசியமற்ற கைதுகளையும், கொலைகளையும் பார்த்து ரசித்துவிட்டு, அதனை மறைப்பதற்கு கோயில்களைக் கட்டியும், நிவாரணங்களை வழங்கியும் கபட நாடகமாடி வந்துவிட்டு, இப்போது மக்கள் தீர்ப்பால் அதிகாரம் பறிபோன நிலையில் தமிழ் மக்கள் நலனைப் பற்றியும், கைதுகள், கொலைகள் பற்றியும் சிந்திப்பது மக்களை முட்டாளாக்குவதற்குச் சமனானதாகும்.

டக்ளஸ் தேவானந்தாவிற்கு பதவி போனநிலையிலேதான், தான் ஒரு தமிழன் என்ற உணர்வு வருமானால் அவர் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கவேண்டும் என்பதே என் போன்றவர்களின் விருப்பம் ஆகும்.

*கொக்குவில்.*

எம்.ஜீவா.

## நல்லை ஆதீனக் கட்டடத்தை கையளிப்பதில் தாமதம் ஏன்?

நல்லூர் ஆதீனத்தில் என்ன நடக்கிறது? இன்று இந்து மக்களின் மனதில் நிற்கும் முக்கிய கேள்வி இதுதான். இந்து மக்களுக்கு இருக்கும் ஒரேயொரு ஆதீனம், சமய பீடம் இதுதான்.

அண்மையில் RRAN நிதியில் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டது. கடந்த நவராத்திரி விழாவின் பொழுது இம்மண்டபம் ஆதீன சுவாமிகளிடம் கையளிக்கப்படும் என்று பலரும் எதிர்பார்த்தோம். ஆனால் இன்றுவரை பெரிய தகரம் போட்டு முகப்பு மூடிக்கிடக்கிறது. ஆதீன கர்த்தாவிடம் இதைப் பற்றிக் கேட்டால் விசனத்துடன் ஒரு நீண்ட பெருமூச்சுத்தான் பதிலாக வெளிவந்தது. இக்கட்டடத்துக்கு எவ்வளவு நிதி வந்தது? எவ்வளவு செலவு ஏற்பட்டது? - என்ற விவரங்கள் ஒன்றுமே தனக்குத் தெரியாது என்று கூறிய சுவாமிகள், இதை நிர்மாணம் செய்த பொறியியலாளர், ஒன்றிலும் திருப்தி அடையாமல் அரச அதிபருக்குச் செய்த முறைப்பாடுகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, மண்டபத்தைக் கையளிக்காமல் அரச அதிபர் மௌனம் சாதிக்கிறார் என்றும் கூறினார். விசாரித்துப் பார்த்ததில் அதில் உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடக்கும் வரை நிலவிய அரசியல் சூழ்நிலை எல்லோருக்கும் தெரிந்த விடயம். அரச நிதியில் கட்டிய கட்டடம் என்பதால் அரச அதிபர் ஆதீன விடயத்தில் ஜனநாயக விரோத மாக நடப்பது பெரிய பிழையாகும்.

மண்டப முகப்பில் பெயர் எழுதச் செய்வித்த 'மெற்றல்' எழுத்துகள் இன்னும் பொறிக்கப்படவில்லை. மின் இணைப்பு இன்றுவரை செய்யப்படவில்லை. மின் விசிறிகள் பொருத்தப்படவில்லை. இப்படியான நிலையில் ஆதீனத்தின் திறப்புகளையும் கையளிக்காமல், ஒவ்வொரு சாட்டுகளைக் கூறி, மண்டபத்தைத் திறக்கவிடாமல் மௌனம் சாதிப்பது எந்த விதத்தில் நியாயம்?

இந்த ஆதீனத்துக்கு ஓர் ஆலோசனைச் சபை உண்டு. சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளவர்கள் இச்சபையில் உள்ளனர்.

அவர்களுமா மௌனம் சாதிக்கிறார்கள்?

அரச நிதியில் இதைக்கட்டியவர்கள், கட்டடத்தின் விவரங்களைப் பட்டியலிட்டு, ஆதீனகர்த்தாவிடம் கையளித்தால் விஷயம் சரி. மிச்ச வேலைகளை அவர் பார்த்துக்கொள்ளுவார்.

ஒருவித அர்த்தமுமில்லாமல், ஒரு சில கோபதாபங்களை மனதில் வைத்து, இந்த விடயத்தை இழுத்தடிப்பது இந்து மக்களுக்குச் செய்யும் ஒரு பெரிய துரோகமாகும்.

புதுக்கட்டடத்தின் திறப்புகளை, பொறியியலாளரிடமிருந்து பெற்று, அவற்றை ஆதீனகர்த்தாவிடம் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னராவது ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

*திருநெல்வேலி.*

மு.மாணிக்கம்.

நியூ ஈசன் சென்ரர்
கோண்டாவில்
இன்று ஆரம்பம்
A/L 2004
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்:- 05.01.2002
(96723) சனி ~ 8 மணி

# சாவகச்சேரி இந்து, டிறிபேர்க்கை மீள இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.5


சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றின் சுற்றாடல் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி அவற்றை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜ் அந்தப் பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடினார். அதன்பின் அங்கு சென்று நிலைமைகளை அவர் நேரடியாக ஆராய்ந்தார்.

அதைத் தொடர்ந்து யாழ்.அரச அதிபரைச் சந்தித்த இரவிராஜ் இரு கல்லூரியின் சுற்றாடல் பகுதிகளில் காணப்படும் கண்ணிகளை அகற்றி அவை மீள இயங்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார். (க-3)

## தட்டுப்பாடு

வலிமேற்கு பிரதேச சபையினர் நடத்தும் சுழிபுரம் ஆயுள்வேத இலவச வைத்தியசாலையில் சகல வகையான மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (க-28)

ஆரம்பம்
Diploma in Video Mixing

COREL DRAW & Page Maker
Mon, Thu: பகல் 11.00
மேலதிக விபரங்களிற்கு
Director
STP 54A, Palaly Road, Kantharmadam, Jaffna
TP: 2674 e-mail: stpedu@sltnet.lk

சக்தி
கல்வி நிலையம்,
கன்னாகம்.
A/L 2004
புவியியல்
"உங்கள் ஆசிரியர்"
ஆரம்பம்: 06.01.2002
ஞாயிறு 9.00 a.m.
(96694)

நாக.தமிழிந்திரன்
நகரத்தில் சிகரம்
தொட்ட - R.②, R.⑤
1. V.கிரிசாம்பாள் ~ AAA
2. S.தமணிகை ~ AAA
3. K.விஜிதா ~ ABB
என்போரையும் 2AB, ABB, 3B பெற்ற ஏனையோரையும் மேலும் உயர வாழ்த்துகிறேன்.
புதிய பிரிவு - 02.03.- 09.01.2002
(96641)

பொருளியற் கல்லூரி
2004 A/L
கலை - வர்த்தகம்
ஜனவரி - 12 (சனி)
யாழ்ப்பாணம் - 9.00 a.m (ப.நே.)
இணுவில் - 3.00 p.m (ப.நே.)
(96598)

புதிய சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி.
A/L 2004
உயிரியல், கணிதம்
ஆரம்பம்: 09.01.2002 புதன் 3 மணி
இரசாயனம் - திரு.மணியம்
இணைந்த கணிதம் - திரு.செந்தில்ராஜ்
பௌதிகம் - திரு.குமரன்.
திரு.குகன், திரு.குலம்
உயிரியல் - திரு.கேங்காதரன்
திரு.தற்பரன்
வடமராட்சியில் அதிஉயர்
பிரபல முன்னணி புகழ் பூத்த
ஆசிரியர்களின் சங்கமம்
மாணவர் மனதில் கங்கனம்.
(96643) நிர்வாகி.

A/L - 2004
(கலை, வர்த்தகப் பிரிவுகள்) ஜனவரி - 12
காலை 8 மணி
ACC. - D.Sam TAM. - மீரா
COM. - பசில் HIN. - ஜோதீஷ்வரன்
ECO. - இராஜேஸ்வரன் LOG. - மோகன்
I.Q. - தவசேகர் GEO. - இக்னேசியஸ்
ENG. - ஜெயக்குமார் CHR. - மல்லிகா
மகேஷ் DRA. - சந்திரன்
DMI யாழ்நகர்.
(C-19074)

A/L 2004
கலை, வர்த்தகப் பிரிவுகள்
கலைப் பிரிவு
ஜனவரி 12
நேரம் - 7 மணி.
வர்த்தகப் பிரிவு
ஜனவரி 19
நேரம் - 8 மணி.
BEACON
(96645) யாழ்நகர்.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
1996 JTC
யாழ் கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்
தரம் 1 முதல் O/L வரை
பிரிவு 2
ஆரம்பம் 06.01.2002 நாளை 7.30 a.m.
எமது யாழ்.
முன்னணி ஆசிரியர் குழு
கணிதம் : திரு.C.K.B.தயாளன்
: திரு.K.மகாலிங்கம்
: திரு.B.ரூபன்
விஞ்ஞானம் : திரு.T.டார்வின்
: திரு.T.விஜயகுமார்
ஆங்கிலம் : திரு.N.பத்மராஜா
தமிழ் : திரு.J.தயாபரன்
: செல்விM.ரஞ்சினி
: திரு.S.திலகநாதன்
சமூகக்கல்வி: திரு.S.ஐங்கரன்
: திரு.N.சிவச்சந்திரன்
வரலாறு : திரு.A.அன்ரன்
சுகாதாரம் : திரு.N.T.S.நாதன்
இ.சமயம் : திரு.N.T.தரன்
: திரு.S.கண்ணன்
கிறிஸ்தவம் : திரு.A.அன்ரன் யோகநாயகம்
கணக்கீடு : திரு.N.T.S.சபநாதன்
சிங்களம் : திரு.S.லீலாகிருஷ்ணன்
அனுமதிக்கு முந்துங்கள்
இதோ! அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்
வரலாறு A.அன்ரன்
ஆரம்பம் : நாளை 06.01.2002
A/L 2003 (7.30a.m.)
2004 (8.30a.m.)
2001இல் O/L எடுத்த மாணவர்களே!
Spoken English
By: N.பத்மராஜா (Rajah)
ஆரம்பம் 06.01.2002 ஞாயிறு 2.30 p.m.
தரம் 5
புலமைப் பரிசில் வகுப்பு
பிரிவு 3
ஆரம்பம் : 12.01.2002 சனி 3.30 p.m.
☆ ஒவ்வொரு ஞாயிறும் கொழும்பு வினாத்தாள்கள் பரீட்சை காலை 9 மணிக்கும் மாலை 3 மணிக்கும் நடைபெறுகிறது.
☆ ஒவ்வொரு வகுப்பிலும் 25 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
☆ பிரிவு 1இற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.
☆ 30 நாள்களும் வகுப்புகள் நடைபெறும்.
☆ தூர இடத்து மாணவர் வசதிகருதி சனி, ஞாயிறு 8-2 மணிவரை வகுப்பு நடைபெறுகின்றது.
☆ அனுமதிகளை உடன் உறுதிப்படுத்திக்கொள்ளவும். (சி19033)
A/L 2004 11.01.2002

ஈசன் கல்வி நிலையம் A/L 2004

| வர்த்தகம் | கலை | கணித - உயிரியல் |
|---|---|---|
| ACC. : திரு.பாலவாசன் | TAM. : திரு.லிங்கம் | PHY. : திரு.குமரன் |
| COM. : திரு.பசில் | LOG. : திரு.S.S.மனோகரன் | CHE. : திரு.சிவத்திரன் |
| ECO. : திரு.இராஜேஸ்வரன் | HIN.C., HI.M. : திரு.கிருஷ்ணா | C.MAT. : திரு.ரவீந்திரன் |
| I.Q. : திரு.தவசேகர் | GEO. : திரு.கவியுகன் | BIO. : திரு.கெங்காதரன், திரு.தயாபரன் |
| ENG. : திரு.ஜெயக்குமார் | | |

ஆரம்பம்: 09.01.2002 (WED.)
நேரம்: ACC: 9.00a.m, COM: 4.00 p.m. (96624) PHY: 8.00 a.m., CHE: 4.00 p.m.

To become a computer professional.........join at IIS
Computer Courses
New Batches Start on : 12/01/2002 Saturday at 9.00 am

| Courses | Duration (Month) |
|---|---|
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 5 |
| Diploma in Visual Basic Programming | 5 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Diploma in Computer Programming | 8 |
| Diploma in Personal Computer Specialist | 8 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |



✓ பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
✓ தகுதி, அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.
✓ நவீன கணனித் தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி
✓ Multimedia Projector வசதி கொண்ட விரிவுரை மண்டபம்.
✓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த, விண்ணப்பிக்கத் தவறிய அனைத்து மாணவர்களுக்குமென ஆரம்பிக்கப்படும் பயிற்சி நெறிகள்
✓ பல்வேறு வகையில் கட்டணச் சலுகைகள்
Institute of Informatics Studies
I I S
Head Office: 100, Clock Tower Road, Jaffna. ☎ 021-2831 Email: iis@sltnet.lk
Branches: Nelliyady Karaveddy. Main Street, Chankanai.

ENGLISH
SPOKEN AND GRAMMAR
புதிய பிரிவு
(சனி, ஞாயிறு)
By: BRITTO
ஆரம்பம் :- 05-01-2002 சனிக்கிழமை
நேரம் :- பி.ப. 3.30 (ப.நே.)
இடம் :- கோக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்) (C/19072)

இணையப்பக்க வடிவமைப்பு, இணைய சேவை வழங்குநர்கள்
www.sooriyan.com
(Internet Solution Providers)
இத் நூற்றாண்டின் இணையப் புரட்சியில் உங்களை இணைக்க - தமிழ் இணைய முன்னோடிகளான எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
077 882893, 077 780304
இல.14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு.
(தமிழ்ச் சங்கத்திற்கு முன்பாக) (C-20081)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361-ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.